# அணைக்கட்டுகள், ஆறுகள் மற்றும் எமது உரிமைகள்

## அணைக்கட்டுகளால் அச்சுறுத்தல்களுக்குள்ளாகும் மக்களுக்கு

### வழிகாட்டும் கையேடு




SLNF

INTERNATIONAL RIVERS
people • water • life

கங்கையின் நண்பர்கள் மற்றும் இலங்கை இயற்கை ஒன்றியம்

# அணைக்கட்டுகள், ஆறுகள் மற்றும் எமது உரிமைகள்

அணைக்கட்டுக்ளால் அச்சுறுத்தல்களுக்குள்ளாகும் மக்களுக்கு

வழிகாட்டும் கையேடு

மொழியாக்கம்
ச.விஸ்வலிங்கம்

பிரசுரம்

கங்கையின் நண்பர்கள் மற்றும் இலங்கை இயற்கை ஒன்றியம்

இலங்கை இயற்கை ஒன்றியம்
இல 546/3 வட்ட மாவத்தை,
கங்கொடவில,
நுகெகொட
தொ.பே 0112803139 தொலைநகல்:0112803139
slnf@sltnet.lk / www.slnf.net

## முன்னுரை

இலங்கையில் கூடுதலான அளவில் அபிவிருத்தியினால் அநாதைகளாக்கப்பட்டவர்கள் யானை – மனித பிரச்சினை வளர்ச்சி அடைவதற்கும் மண்சரிவ நிலைமை உக்கிரமடைவதற்கும் பிரதான காரணமாக உள்ளது பாரிய அளவில் அணைக்கட்டுகளுடான நீர்த்தேங்கங்களாலாகும். விக்டோரியா, ரந்தெனிகல, ரன்தம்பே நீர்த்தேக்கம், உடவளவ, லுணுகம்வெஹெர நீர்த்தேக்கங்கள் நிர்மாணிக்கப்பட்டதோடு அநாதரவானவர்களின் அளவு மிக அதிகமாகும். இந்த நீர்த்தேக்கங்களுக்கு உள்ளான சம்பிரதாய பூர்வமான விவசாய நிலங்கள் மற்றும் குளக்கட்டுகளின் அளவு மிக அதிகமாகும். அழிக்கப்பட்ட வனவிலங்குகளின் புகழிடங்கள் அதிக விசாலமானதாகும்.

அதில் நிறுத்தாமல் இன்று வரையில் நிர்மாணிக்கப்படும் மற்றும் நிர்மாணிப்பதற்காக திட்டமிடும் மேல் கொத்மலை, வேறகல, மொரகஹகந்த, களுகங்கை, உமா ஓயா, மஹா ஓயா மற்றும் எடஓயா போன்ற நீர்த்தேக்கங்களுக்கு உள்ளாகும் மற்றும் சிறுதாகிவரும் வனவிலங்கு புகலிடம் அநாதரவாகும் மக்கள் மற்றும் இல்லாமல் போகும் விளை நிலங்கள் மிக பாரிய அளவாகும்.

பெரும்பாலான நீர்த்தேக்கங்கள் நிர்மாணிக்கப்படுவது எதற்காக? பிரதானமாக நீர் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காகவாகும், வெளிநாட்டு நிதியை பெற்றுக்கொள்வதற்கான வசதிக்காக அந்த திட்டம் பல்விடய நீர் மின்சார திட்டம் என அறிமுகம் செய்யப்பட்டு நிதி உதவிகள் பெற்றுக் கொள்ளப்படுகிறது. இருந்தும் இந்த திட்டத்தை திட்டமிடப்பட்ட சந்தர்ப்பத்தில் பிரதிபலன்களில் 60% கூட பெற்றுக்கொள்ள முடியாமல் உள்ளது. இந்த பாரிய அளவிலான நீர்த்தேக்க திட்டங்களினால் விளை நிலங்கள் இல்லாமல் போதல் மற்றும் மட்டுப்படுத்தப்படல். யூானை மனித பிரச்சினை வளர்ச்சி அடைதல், மண்சரிவ அச்சுறுத்தல் ஏற்படல். சுகாதார பிரச்சினை உக்கிரமடைதல், இல்லாமை விருத்தி அடைதல் போன்ற பாதிப்பை ஏற்படுத்தும் பிரதிபலன்கள் அதிகமானவற்றை மட்டும் உருவாக்கியுள்ளது. அந்த நிலைமையை புறக்கணிப்பதற்காக மேலும் உள்ள பாரிய நிதியை உள்வாங்க வேண்டியுள்ளது. இந்த காரணத்தால் எமது நாடு மேலும் மேலும் பின்னோக்கி செல்கிறது. பூரிய அளவிலான அணைக்கட்டுகளை நிர்மாணிப்பதற்காக டொலர் கோடிக்கணக்கில் நிதி வெளிநாடுகளிலிருந்து கடனுக்கு பெற்று அந்த கடனுக்காக வட்டியையும் நிதியையும் செலுத்துவதோடு அந்த திட்டங்களினால் ஏற்பட்டுள்ள பாரிய அச்சுறுத்தல்களுக்கு தீர்வை தேடுவதற்காகவும் மேலதிக நிதி தொகையை செலவு செய்துகொண்டிருக்கின்றனர். இதன் இறுதி பிரதிபலன் எமது நாடு தொடர்ச்சியாக மூன்றாவது உலக நாடாக பெயர்பெற்று இல்லாமையின் இறுதிக்கட்டத்திற்கு வருவதாகும்.

இதைப்போன்ற நிலைமை ஏற்பட்டாலும் மேலும் நாட்டின் நிலைமையை புரிந்து கொண்டு பாரிய அணைக்கட்டுகளை நிர்மாணித்து அமைக்கும் நீர்த்தேக்கங்கள் எமது நாட்டில் மீண்டும் நிர்மாணிக்கப்படாமலிருக்க அரசியல் வாதிகள் அல்லது திட்டம் தீட்டுபவர்கள் தீர்மாணிக்கவில்லை. அவர்கள் பணத்திற்குள்ள பேராசையினால் நாட்டின் மக்களை விவசாய நிலங்களை ஈடுவைத்து மேலும் மேலும் பாரிய அளவிலான அணைக்கட்டுகளை நிர்மாணித்து தமது வயிற்றை மட்டும் நிரப்பிக்கொள்ள மட்டும் முயற்சிக்கின்றனர்.

இதற்காக நிறத்துவதற்கான முற்றுப்புள்ளியை வைப்பதற்கான காலம் வெகுவாக சென்று கொண்டிருக்கிறது. அதனால் எமது நாட்டு மக்களை ஊக்குவிப்பதை விரைவாக மேற்கொள்ள வேண்டியுள்ளது. அப்படியல்லாவிட்டால் தற்போதைய பரம்பரைக்கு மட்டுமல்லாது பிறக்காத எதிர்கால சந்ததியினருக்கும் இவற்றின் நஷ்டயீட்டை செலுத்த வேண்டிவரும். ஆதலால் இலங்கை இயற்கை ஒன்றியம் மற்றும் கங்கையின் நண்பரகள் அமைப்புன் ஒன்றிணைந்து சர்வதேச கங்கை வலைபின்னலின் (IRA) ஒத்துழைப்புடன் எமது நாட்டு மக்களின் பரிந்தணர்வை பரவலாக்குவதற்கு இந்த பத்தகத்தை பிரசுரிக்கிறோம். ஏதிர்காலத்தில் பாரிய அளவிலான அணைக்கட்டை நிர்மாணிப்பதற்கு எதிராக தற்பொழுதைவிட பலமான குரலை எழுப்புவதற்கு மக்களை வலுவாக்குவதற்கு இந்த சிறிய புத்தகத்தின் மூலமாக மேற்கொள்ளலாம் என நாம் எதிர்ப்பார்க்கிறோம்.

திலக் காரியவசம்
இணைப்பாளர்
இலங்கை இயற்கை ஒன்றியம்

## அர்ப்பணம்

பாரிய அளவிலான அணைக்கட்டுகளுக்கு உள்ளாகும் சாரமான வயல் நிலங்கள், குளக்கட்டுகள், வனங்கள், மக்கள் வாழ்க்கையைப்போல் வன விலங்குகளை பாதுகாத்துக்கொள் முயற்சித்த, முயற்சி எடுத்துக்கொண்டிருக்கும் அந்த கிராமங்களின் இதய துடிப்பான மக்களுக்கு இந்த சிறிய புத்தகத்தை மதிப்புடன் அர்ப்பணம் செய்கிறோம்.

## அணைக்கட்டுகள், ஆறுகள் மற்றும் உரிமைகள்

## அணைக்கட்டுகளால் பாதிப்படையும் சமூகத்திற்கான ஒரு நடவடிக்கை வழிகாட்டி

### பாராட்டுரை

ஒக்ஸ்பாம் அவுஸ்திரேலியா மற்றும் போர்ட் மன்றம் ஆகியவற்றின் தாராள உதவியின் மூலமாகவே இந்த நடவடிக்கை வழிகாட்டி உருவாக்கப்பட்டது. இதன் அணிந்துரை அவிவா இனோப், ஆண் கத்ரின் ஸ்கினீடர் மற்றும் சூசனி வொங் ஆகியோரால் எழுதப்பட்டது. சனோன் லோரன்ஸ் இறுதி வரைவை வடிவமைத்தார் மற்றும் ஜெமிக் கிரீன்பிலேட் பிழை திருத்தத்திற்கு உதவினார். விளக்கப்படங்களுக்கான எண்ணக்கருவிற்கு மதியுரை வழங்கி, பக்கங்களின் மாதிரி மற்றும் திட்டத்தின் முழுமையான வழிகாட்டியாக மதிப்பிட முடியாத உதவிகளை டிரேஸி பேர்க்கின்ஸ் வழங்கினார். ஆழகான விளக்கப்படங்களை வழங்கிய ஹரீஸ் இச்வானுக்கு நன்றி. புாரிய சேகரிப்பிலிருந்து விளக்கப்படங்களை எமக்கு பாவிப்பதற்காக அனுமதித்த ஹெஸ்பிரியன் மன்றத்திற்கு நன்றி.

அணைக்கட்டுகளால் பாதிக்கப்பட்ட சமூகத்தினருடன் வழிகாட்டியை கள பரிசீலனையை செய்த பொழுது பரிந்துரைகளையும் கருத்துக்களையும் வழங்கிய ஆலோசனை குழுவிற்கு எமது விசேட நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். அணைக்கட்டுகளால் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் உலகளாவிய ரீதியில் வசிக்கும் அவர்களின் ஆதரவாளர்களுக்கும் இந்த வழிகாட்டி தைரியத்தையும் அறிவுடைமையையும் வழங்குகிறது.

ஆலோசனை குழுவினராக கிரின் சேடியா (இந்தியா), பியான்போன் டேடிஸ் (தாய்லாந்து), இரா பமட் (பிலிப்பைன்ஸ்), பிரெங்ளின் ரொத்மென் (பிரேஸில்), கெவின் வுட்ஸ் (தாய்லாந்து ∴ அமெரிக்கா) மற்றும் ஹெர்கான் ஹைபோகா (துருக்கி∴குர்டிஸ்தான்).

கங்கையின் நணபர்கள் மற்றும்
இலங்கை இயற்கை ஒன்றியம்

நன்றி…!

இந்த கைப்புத்தகத்தின் ஆரம்ப பிரதியை தயாரிப்பதற்காக தாராள உதவியைப் பெற்றுத்தந்தது ஒக்ஸ்பாம் அவுஸ்திரேலியாவும் போர்ட் மன்றமுமாகும். மதற்பிரதியை தயாரித்தது அவிவா இனோப், ஆன் கத்தரின் மற்றும் சுசான் வொன் ஆகியவர்களாளேயாகும். தமிழ் பிரதியை தயாரிப்பதற்கு நிதி உதவி கிடைத்தது சர்வதேச கங்கை வலைபின்லின் மூலமாகும்(IR).

இங்கு இந்த புத்தகம் தொடர்பாக தமது அனுபவத்தை பெற்றுத் தந்த அணைக்கட்டினால் பாதிப்பிற்குள்ளான மக்களின் அறிவு பூர்வமான பங்களிப்பு மற்றும் உணர்வு இந்த நடவடிக்கைக்கு கிடைத்த பாரிய உந்துதலாக இருந்ததாலாகும்.

அணைக்கட்டுகளினால் இலங்கை மக்கள் பாதிப்பிற்குள்ளாகும் மக்கள் தொடர்பாக முதலாவது முறையாக கலந்துரையாடல் இடம்பெறுவது மஹாவெளி திட்டத்தினுடனாகும். அதிலிருந்து இந்த நாட்டில் அமைக்கப்பட்ட அணைக்கட்டுகளால் பாரிய அளவிலான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் தற்பொழுது திட்டமிடப்பட்டுள்ள அணைக்கட்டுகள் பலவற்றால் எதிர்காலத்தில் மேலம் பாரிய அளவிலான மக்கள் பாதிப்பிற்குள்ளாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதற்காக நடைபெறவிருக்கும் தமது உரிமைகளை பாதுகாத்துக் கொள்வதற்கான சமூக, பொருளாதார மற்றும் சுற்றாடல் ஆர்ப்பாட்டங்களை உணர்வு பூர்வமாக ஆக்குவதற்கான தேவை உள்ளது. அது மக்களின் உரிமை மற்றும் சுற்றாடல் நியாயத்துவத்திற்காக சரியான போராட்டத்திற்காக வழிகாட்டவே இந்த புத்தகத்தை தமிழில் மொழிபெயர்ப்பதன் நோக்கமாகும். அதற்காக முதல் பிரதியில் இல்லாத இலங்கை சமூகத்திற்கு தேவையை விளக்கும் சிலவற்றை நாங்கள் சேர்த்தோம். மிகவும் சுலபமாக பாஷையில் இந்த மொழிபெயர்ப்பை விஸ்வலிங்கம் அவர்களுக்கு அட்டைப்படத்தை தயாரித்த அநுர ஸ்ரீநாத் அவர்களுக்கு கணணி பதிப்பை மேற்கொண்ட கனிஸ்க சுலோச்சன அவர்களுக்கு எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

உலகலாவிய ரீயில் பாதிப்பை ஏற்படுத்திய மற்றும் தோல்வியான அணைக்கட்டை நிறுத்தி மக்களின் உரிமை மற்றும் சுற்றாடலை பாதுகாப்பதற்காக உலகளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள சர்வதேச போராட்டத்தில் பங்காளர்களாக இந்த கைப்புத்தகத்தை எமது மக்களுக்கு வழிகாட்டும் என்பதே எமத எதிர்ப்பார்ப்பாகும்.

கங்கையின் நணபர்கள் மற்றும்
இலங்கை இயற்கை ஒன்றியம்

# உள்ளடக்க அட்டவணை


அறிமுகம் ……………………………………………………………………….

அத்தியாயம் 1: அணைக்கட்டு தொடர்பான அடிப்படை தகவல்கள்…………..
அணைக்கட்டு என்றால் என்ன?..............................................................
அணைக்கட்டுகள் என்ன செய்யும்?............................................................
யார் பயன் பெறுவர்? யாருக்கு இழப்பு?...............................................
அணைக்கட்டுகள் எவ்வாறு செயற்படும்?..................................................
அணைக்கட்டுக்கு அதிக விலைக்கொடுப்பது யார்?............................

அத்தியாயம் 2: அணைக்கட்டின் தாக்கங்கள்………………………………...
வரைப்படம்: அணைக்கட்டின் தாக்கங்கள்………………………………
புலம்பெயர்வதற்கான உண்மை நிலை…………………………………..
கீழ் நீரோட்டத்தால் மில்லியன் கணக்கான மக்கள் பாதிப்படைகின்றனர்….

அத்தியாயம் 3: அழிவை ஏற்படுத்துகின்ற அணைக்கட்டுகளுக்கு எதிரான சர்வதேச இயக்கம்………………………………………………..
அணைக்கட்டு போராளிகளின் வெற்றிகள்…………………………………..
வெற்றி அளித்தது.. ஆனால் இன்னும் அணைக்கட்டுகள் சமூகத்திற்கு அச்சுறுத்தலாக உள்ளது……………………………………………………

ஆத்தியாயம் 4: அணைக்கட்டுகளுக்காக எவ்வாறு போராடுவது………………….
உங்களின் ஆர்ப்பாட்டங்களை திட்டமிடுதல்…………………………………
அணைக்கட்டுகளுக்காக போராடுவதற்கான முக்கிய தந்திரோபாயங்கள்…...
அணைக்கட்டு நிர்மானிக்கப்படும் ஒவ்வொரு கட்டத்திலும் உங்களால் என்ன செய்ய முடியும்……………………………………………………………

அத்தியாயம் 5: பெரிய அணைக்கட்டிற்கான மாற்றீடு…………………………………….
வலுச்சக்திக்கான மாற்றீடு……………………………………………………
நீருக்கான மாற்றீடு…………………………………………………………….
வெள்ள முகாமைத்துவத்திற்கான மாற்றீடு……………………………………

முடிவுரை………………………………………………………………………..

பிராந்திய தொடர்புகள்…………………………………………………………….

# அறிமுகம்

பெரிய அணைக்கட்டுகளுக்கு எதிராக, உலகளாவிய ரீதியில் மக்கள் கிளர்ந்தெழுகின்றனர். அவர்கள் புதிய அணைக்கட்டுகளிலிருந்து தாங்களின் வாழ்வாதாரத்தையும் ஆறுகளையும் பாதுகாத்துக்கொள்ள போராடுகின்றனர். அவர்கள் பழைய அணைக்கட்டுகளால் ஏற்படுத்தப்பட்ட பிரச்சினைகளுக்காக **நட்டயீடு** வழங்குமாறு கோரிக்கை விடுக்கின்றனர். அவர்கள் வலுச்சக்தி, நீர் விநியோகம் மற்றும் உணவு முகாமைத்துவம் போன்றவற்றிற்கான சிறந்த மாற்றீடை முன்மொழிகின்றனர். தாங்களின் வாழ்க்கை பாதிப்படையும் தீர்மானங்களுக்காகவே சகலரும் குரல் கொடுத்து போராடுகின்றனர்.

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக, அணைக்கட்டுகளுக்கு எதிரான சர்வதேச இயக்கம் திடமாக வளர்ச்சியடைந்து பல வெற்றிகளை பெற்றுள்ளது. ஒரு சில அணைக்கட்டுகள் நிறுத்தப்பட்டுள்ளது. சிறிய அணைக்கட்டுகள் மற்றும் நீர் பாதுகாப்பு போன்ற சிறந்த மாற்றீடுகளை அமுல்படுத்தியுள்ளது. சமூகங்கள் சிறந்த நட்டயீட்டை பெற்றுள்ளனர். ஒரு சில அணைக்கட்டுகள் குறைக்கப்பட்டுள்ளது.

ஆனால் உலகளாவிய ரீதியில் புதிய அணைக்கட்டுகள் கட்டப்படுவதால் சமூகங்கள் தொடர்ச்சியாக அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகின்றனர்.

புதிய அணைக்கட்டுகளால் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகும் சமூகங்களை வலுவூட்டவும் வளர்ச்சியடைந்து வரும் அணைக்கட்டகளுக்கு எதிரான சர்வதேச இயக்கத்துடன் கருத்துக்களை பரிமாற்றிக் கொள்ளவும் இந்த நடவடிக்கை வழிகாட்டியை சர்வதேச ஆறுகள் வலைபின்னல் உருவாக்கியது. உலகளாவிய ரீதியில் உங்களின் போராட்டங்களில் உதவுவதற்காக சர்வதேச ஆறுகளுக்கான வலைபின்னலும் ஏனைய **அரச சார்பற்ற நிறுவனங்களும் (NGOs)** தயாராக இருக்கிறது. இந்த வழிகாட்டியின் இறுதி பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் உங்களுக்கு உதவி செய்யலாம்.

அணைக்கட்டுகள் தொடர்பான தீர்மானங்களில் எவ்வாறு குரல் கொடுப்பதன் மூலமாக கோரிக்கை விடுப்பது, உங்களின் உரிமையை எவ்வாறு பாதுகாப்பது மற்றும் முன்மொழியப்பட்ட அணைக்கட்டுக்கு உங்களின் கருத்துக்களை எவ்வாறு முன் மொழிவது என்பதை தீர்மானிப்பதற்கு இந்த வழிகாட்டி தகவல்களையும் கருவிகளையும் வழங்கும் என நாங்கள் நினைக்கிறோம்.

ஆத்தியாயம் 1 யார் அணைக்கட்டுகளால் பயனடைகின்றனர், அதற்காக யார் பழிவாங்கப் படுகின்றனர், எவ்வாறு அவர்கள் செயற்படுகின்றனர் என்ற விவரங்கள் உள்ளடங்களாக மற்றும் அணைக்கட்டுகள் தொடர்பான பொதுவான தகவல்களை வழங்குகிறது.

- அத்தியாயம் 1 அணைக்கட்டுகளால் யார் பயன் பெறுகின்றனர், அவற்றால் யார் பழிவாங்கப் படுகின்றனர், அவர்கள் எவ்வாறு செயற்படுகின்றனர் போன்றவை உள்ளடங்களாக மற்றும் அணைக்கட்டுகள் தொடர்பான பொது தகவல்களை வழங்குகிறது.
- அத்தியாயம் 2 இயற்கை வளங்கள் மற்றும் அணைக்கட்டுகளால் சமூகத்திற்கு ஏற்படும் தாக்கங்கள் தொடர்பாக கதைக்கப்படுகின்றது.
- அத்தியாயம் 3 பாதிப்பை ஏற்படுத்தும் அணைக்கட்டுகளுக்கு எதிரான மக்களின் சர்தேச இயக்கம் மற்றும் அதன் வெற்றிகள் தொடர்பாக விவரிக்கிறது.
- ஆத்தியாயம் 4 அணைக்கட்டுகளுக்காக சமூகங்கள் எவ்வாறு சவால் விடலாம் மற்றும் எவ்வாறு அவர்களின் உரிமைகளை பாதுகாத்துக் கொள்ளலாம் என்பதற்கான ஆலோசணைகளை வழங்குகிறது.
- அத்தியாயம் 5 நீர், வலுச்சக்தியை மக்கள் பெற்றுக் கொள்வதற்கான சிறந்த வாய்ப்புகள் மற்றும் வெள்ள முகாமைத்துவ தேவைகள் போன்ற தகவல்களை வழங்குகிறது.
- இந்த வழிகாட்டியின் இறுதியில் தொடர்புகளுக்கான பட்டியல் உங்களுக்கு உதவக்கூடியதாக இருக்கலாம்

புாதிப்பை ஏற்படுத்தும் அணைக்கட்டுகளுக்கு எதிரான உங்களின் போராட்டங்களின் வெற்றிகளுக்கு எமது வாழ்த்துக்கள். நீதி மற்றும் கௌரவத்திற்கான எமது போராட்டத்தில் நாங்கள் முதலாவதாகும். நீர் வாழ்வாகும், அறப்பிற்காகவல்ல!

# அத்தியாயம் 1:

# அணைக்கட்டு தொடர்பான அடிப்படை தகவல்கள்

## ❖ அணைக்கட்டு என்றால் என்ன?

அணைக்கட்டு என்பது ஆற்றுக்கு குறுக்காக கட்டப்படும் மதிலாகும். ஆணைக்கட்டுகள் மண்ணாலும், கல் அல்லது சீமெந்து கொன்கிரீட் கலவையாலும் கட்டப்டுகின்றது. **நீர் நிலைகள்** எனப்படும் செயற்கையான குளங்களை உருவாக்குவதற்காக, அவர்கள் ஆற்று நீரோட்டத்தை தடுக்கின்றனர். நீர் நிலைகளில் தேங்க வைக்கப்பட்டிருக்கும் நீரை மின்சக்தியை உற்பத்தி செய்யவும், நீர்ப்பாசன மற்றும் குடிநீர் வசதிகளை வழங்கவும், நிதி சேகரிப்பிற்காக படகு யாத்திரைகளை மேற்கொள்ளவும், வெள்ளத்தை பாதுகாக்கவும் மற்றும் பொழுது போக்குக்காகவும் பாவிக்கலாம். ஒரு சில அணைக்கட்டுகள் அவற்றிற்கும் பார்க்க அதிகமானவற்றை செய்வதற்காக கட்டப்படுகின்றது.

உலகளாவிய ரீதியில் 47,000 த்திற்கு மேலான பெரிய அணைக்கட்டுகள் (15 மீட்டர்களுக்கு உயரமானவை) கட்டப்பட்டுள்ளது. மிகவும் பெரிய அணைக்கட்டுகள் சீனா, ஐக்கிய அமெரிக்கா மற்றும் இந்தியா போன்ற நாடுகளிலேயே இருக்கிறது. ஊலகத்திலேயே மிகப்பெரிய அணைக்கட்டு 250 மீட்டருக்கு மேலான உயரமும் (அல்லது 60 மாடி கட்டிடத்திற்கு மேல் உயரமானது) மற்றும் பல கிலோ மீட்டர்கள் அகலமானது. ஆவற்றை நிர்மானிப்பதற்கு 10 ஆண்டுகளுக்கு மேலான காலத்தையும் பல பில்லியன்டொலர் செலவும் ஆனது.

## ❖ அணைக்கட்டுகள் என்ன செய்யும்?

- **நீர் விநியோகம்** மற்றும் **நீர்ப்பாசத்திற்கான அணைக்கட்டுகள்** நீர் நிலைகளில் நீரை சேமித்து வைக்கும். இந்த நீர் நகரங்களுக்கோ அல்லது விவசாய நிலங்களுக்கோ பாரிய குளர்கள் மற்றும் கால்வாய்களை பாவித்து அனுப்பப்படும்.
- **வலுச்சக்தி அணைக்கட்டுகள்** தரப்பைன் எனப்படும் இயந்திர இலைப்பரப்பை திருப்புதற்காக நீரைப் பாவித்து மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது. மின்சாரம் மின் கடத்தல் வழியினூடாக நகரங்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் அனுப்பப்படுகின்றது. தரப்பைனுக்கு நீர் சென்ற பின், மீண்டும் நீர் ஆற்றுக்கு சென்று அதற்கு அடியிலே உள்ள அணைக்கட்டை சென்றடைகிறது.
- **வெள்ள தடுப்பு அணைக்கட்டுகள்** கடும் மழைக்காலங்களில் **கீழ் நீரோட்டப்பகுதிகளில்** ஏற்படும் வெள்ளத்தை குறைப்பதற்காக நீர் சேமித்து வைக்கப்படுகின்றது.




அணைக்கட்டுகள் பல வடிவங்களிலும் அளவுகளிலும் இருக்கும் ஆனால் பெரும்பாலானவை இந்த விசேட அம்சங்களை கொண்டதாகும்.

- **படகு யாத்திரைக்கான அணைக்கட்டுகள்** நீரை சேமீத்து வைத்து ஆற்றில் நீர் குறையாக இருக்கும் பொழுது நீரை விடுவிக்கிறது அதனால் வருடம் முழுவதிலும் படகுகள் மேலும் கீழும் பிரயாணம் செய்கிறது. அவை பெரும்பாலும் மேலே உயர்த்தக்கூடிய மற்றும் கீழே பணிக்கக்கூடிய கதவுகள் அல்லது பிரிப்புகளுடனேயே கட்டபட்டிருக்கும் அதனால் படகுகள் அணைக்கட்டை தாண்டி பிரயாணம் செய்யக்கூடியதாக இருக்கும்.

# யார் பயன் பெறுவர்? யாருக்கு இழப்பு?

நீர் சேமித்து வைக்கும் அல்லது மின்சக்தியை உற்பத்தி செய்யும் அணைக்கட்டுகளால் தொழிற்சாலைகளும் நகர்ப்புற குடியிருப்புகளும் பயனடையும். நீர்ப்பாசனங்களுக்காக மலிவான நீர் கிடைப்பதால் பாரிய அளவிலான விவசாய கம்பெனிகள் பயனடைகிறது. ஆணைக்கட்டுகள் தொடர்ச்சியாக கிராமிய சமூகங்களிடமிருந்து வளங்களை பெற்று இதன் பயனை தொழிற்சாலைகளுக்கும் நகரத்தில் வாழ்கின்ற மக்களுக்கும் வழங்குகிறது. ஒரு சில வேலைகளில் இந்த தொழிற்சாலைகள் மற்றும் மக்கள் அயல் 1நாட்டை சேர்ந்தவர்களாக இருக்கலாம்.

நிர்மான மற்றும் பொறியியல் நிறுவனங்களும் பயனடைகின்றனர். ஆணைக்கட்டுகளை வடிவமைக்கவும் நிர்மாணிக்கவும் அவர்கள் பல மில்லியன் டொலர்களை பெறுகின்றனர். அணைக்கட்டுகளை நடைமுறைப்படுத்தும் பொழுது அல்லது நிர்மானிக்கும் பொழுது அரசாங்கம் வரிகளை செகரிப்பதன் மூலமாக பயன் பெறுகிறது. அணைக்கட்டுகளுக்காக பாரிய அளவில் பணம் செலவிடப்படுவதால், அரசாங்க அல்லது நிறுவன உத்தியோகத்தர்கள் ஊழல்களிலும் சில சமயங்களில் தனது சொந்த நன்மைகளுக்காகவும் பணத்தை எடுத்துள்ளனர்.

வேடுவ மக்கள் அல்லது பலங்குடி மக்கள் மற்றும் கிராமிய குடும்பங்களே பாரிய அணைக்கட்டுகளால் மிகவும் பாதிப்பிற்கு உள்ளாகின்றனர். அணைக்கட்டுகளுக்கும் நீர் தேங்கு பிரதேசங்களுக்காக மில்லியன் கணக்கான மக்கள் தாங்களின் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டனர். ஆடிவாரங்களில் வாழ்ந்த பல மில்லியன் கணக்கான மக்கள் வளங்களையும் அவர்களின் பாரம்பரிய வாழ்வாரங்களையும் இழந்தனர்.

நிலைமைகள் மிக மோசமாகிக் கொண்டு வந்ததால், அணைக்கட்டுகால் பாதிப்பிற்குள்ளாகும் மக்கள் அணைக்கட்டுகளை கட்டுவதா இல்லையா என்ற தீர்மானத்தை அரிதாக உள்ளடக்கினர். பொதுவாக தாங்களின் தகவல்களுக்கான உரிமைகள் மற்றும் பொது மக்கள் கருத்துக் கோரல், புதிய இடங்கள் மற்றும் வாழ்வாதாரங்களுக்காக கோரிக்கை விடுதல், அணைக்கட்டுக்காக எதிர்ப்பு தெரிவித்தல் போன்ற விடயங்களைப்பற்றி அவர்களுக்கு தெரியாது. ஆவர்கள் அணைக்கட்டுகளக்கு அண்மையிலேயே வசித்தாலும் நீர் அல்லது மின்சாரத்தின் பயனைக்கூட பெரும்பாலும் பெறாதவர்களாக இருக்கின்றனர்.



பெரும்பாலான விவசாயிகள் நீர்ப்பாசனத்தையும் மின்சாரத்தையும் அணைக்கட்டுகளிலிருந்தே பெற்றுக் கொள்கின்றனர்.



அணைக்கட்டுகளால் பாதிக்கப்பட்ட மக்கள் பெரும்பாலும் இந்த வசதிகளை பெற்றுக் கொள்வதில்லை மற்றும் மிக மோசமான காணிகளே அவர்களுக்கு கிடைக்கிறது.




நன்மைக்கும் பார்க்க ஒருசில அணைக்கட்டுகள் வெள்ளத்தால் மோசமான விளைவகளை ஏற்படுத்தும்.

## ❖ அணைக்கட்டுகள் எவ்வாறு செயற்படும்?

அணைக்கட்டுகள் ஓரளவு பயனை வழங்கலாம், ஆனால் எதிர்ப்பார்க்கபட்ட தேவையான அளவு மின்சாரத்தை தயாரிப்பதற்கும் நிலத்திற்கு நீர்ப்பாசணத்தை வழங்கவதற்கும் தொடர்ச்சியாக அவை உற்பத்தி செய்வதில்லை. உறுதி செய்யப்பட்டதற்கும் குறைந்த அளவு நீரையே நீர் விநியோக அணைக்கட்டுகள் வழங்குகின்றன. பொதுவாக இது இடம்பெறுவது அணைக்கட்டு கட்டுபவர்களால் ஆற்றில் பாவிப்பதற்கு எவ்வளவு நீர் இருக்கிறது என்பதை அதி மதிப்பீடு செய்வதாலாகும்.

சிறிய அளவிலான வெள்ளங்களை வெள்ள கட்டுப்பாட்டு அணைக்கட்டுகள் நிறுத்துகிறது, ஆனால் பெரிய அளவிலான வெள்ளங்களினால் பாதிபுகள் மோசமடைகிறது. அணைக்கட்டுகளுக்கு கீழேயுள்ள பகுதிகள் பாதுகாப்பானது என மக்கள் எண்ணினால் பல வீடுகள் மற்றும் கடைகளை கட்டலாம். ஏவ்வராயினும் பெரிய அளவு வெள்ளம் ஏற்பட்டால் மற்றும் வெள்ள நீரை நீர்நிலை தாங்கிக் கொள்ள முடியாவிட்டால், கிழ் புறத்தில் இருக்கும் பெரும்பாலான மக்கள் அவர்களின் உடமைகளையும் ஒருசில வேலைகளில் அவர்களின் உயிரைக்கூட இழக்க வேண்டிவரும்.

அணைக்கட்டுகள் நெடுங்காலத்திற்கு நிலைத்து நிற்காது. அவை பொதுவாக ஒரு குறிப்பிட்ட வருடங்களுக்கு நடைமுறைப்படுத்தக்கூடிய விதத்திலேயே கட்டப்படுகின்றது. அணைக்கட்டின் ஆயுள்காலம் அற்றில் எவ்வளவு **வண்டல்** படிகின்றது என்பது உள்ளடங்களாக, பல விடயங்களில் தங்கியுள்ளது. காலம் முடியும் தறுவாயில், வண்டலினால் நீர்நிலை நிறைந்துவிடும். வண்டல் நிறையும் பொழுது, அவை மேலும் செய்றபடாமல் இருக்கும் வரையில், அணைக்கட்டுகளின் செயற்பாட்டை குறைக்கும்.

அணைக்கட்டுகள் சரியாக செயற்படாவிட்டால், மக்களும் அரசாங்கங்களும் பாதிப்படையும்

முன்னால் ஆர்ஜன்டினா ஜனாதிபதி கெரியோஸ் மெனிமாஸினால் யாக்கிரிட்டா அணைக்கட்டைப்பற்றி “ஊழலுக்கான ஞாபக சின்னம்” என விவரித்துள்ளார். இந்த அணைக்கட்டின் செலவு 2.7 பில்லியன் அமெரிக்க டொலரிலிருந்து 11.5 அமெரிக்க டொலராக அதிகரித்ததோடு இன்னும் அந்த திட்டம் முடிவடையாமல் உள்ளது.

பரகுவேயிலும் ஆஜண்டினாவிலும் அமைந்துள்ள, இந்த அணைக்கட்டு உற்பத்தி செய்ய தீர்மானித்த மின்சாரத்தில் 60% மின்சாரத்தையே உற்பத்தி செய்கிறது. இந்த திட்டம் இலாபமானதாக இல்லாதலால் இந்த அணைக்கட்டை முகாமைத்துவம் செய்யும் குழுவினரால் கடனை மீளச் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அரசாங்கங்கள் தொடர்ச்சியாக அணைக்கட்டுகளை கட்டுவதற்காக நிதியை பெறுகின்றன. ஆவர்கள் பெரிய அளவில் பணத்தை சம்பாதிக்க எதிர் பார்க்கின்றனர். எவ்வாறாயினும், எதிர்பார்த்த அளவு மின்சாரத்தை உற்பத்தி செய்யாவிட்டால், கடன்களை மீளச் செலுத்துவதற்கு போதிய அளவு பணம் இருக்காது. அதனால் அவர்கள் கல்வி மற்றும் சுகாதார வசதிகளுக்காக லெசவழிக்கும் தொகையை வெட்டுவதால் மக்கள் பெரிதும் பாதிப்பிற்குள்ளாகின்றனர்.



## ❖ அணைக்கட்டுக்கு அதிக விலைக்கொடுப்பது யார்?

ஒவ்வொரு வருடமும் அணைக்கட்டுகளுக்காக 40 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரையில் செலவிடப்படுகின்றது. அணைக்கட்டுக்களை கட்டுவது மிக செலவாவதால் பொதுவாக அரசாங்கங்கள் பல நிதி வழங்குநர்களிடமிருந்து கடன் பெறுகின்றனர். உலகளாவிய ரீதியில் **பொது மக்கள் அபிவிருத்தி வங்கி** 600 அணைக்கட்டுகளுக்காக 60 பில்லியன் அமெரிக்க டொலர்களை செலவழித்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கி, ஆபிரிக்க அபிவிருத்தி வங்கி அமெரிக்காவிற்கிடையிலான அபிவிருத்தி வங்கிகள் அரசாங்கங்களுக்கும் கம்பெனிகளுக்கும் அணைக்கட்டுகளை நிர்மாணிப்பதற்காக பணத்தை வழங்குகிறது.

அணைக்கட்டின் ஒரு பகுதியை நிர்மாணிப்பதற்கான நிதியில் ஒரு பகுதியை பொதுமக்கள் அபிவிருத்தி வங்கி வழங்கினால், அரசாங்கங்களுக்கு தனியார் வங்கிகளில் கடனைப் பெற்றுக்கொள்வது இலகுவாக இருக்கும். ஜப்பான் மற்றும் ஜெர்மனி போன்ற வசதி படைத்த நாடுகள், அணைக்கட்டுகளை கட்ட வேண்டுமானால் அதற்கான நன்கொடைகளையும் கடன்களையும் கொடுக்கிறது.

அணைக்கட்டு நிர்மாணிக்கப்பட்ட பின், அரசாங்கங்கள் இந்த கடன்களை மீளச் செலுத்த வேண்டும். அந்த அணைக்கட்டுகள் எதிர்ப்பார்க்கப்பட்ட பணத்தை சம்பாதிக்கா விட்டாலும், அரசாங்கம் கடனை கட்டாயமாக மீண்டும் செலுத்த வேண்டும்.




செல்வந்த நாடுகளில் வசிக்கின்ற மக்கள் அணைக்கட்டுகளை நிர்மாணிப்பதால் இரு வழிகளில் பயன் பெறுகின்றனர். அணைக்கட்டுகளை நிர்மாணிப்பதற்காக அணைக்னட்டு நிர்மாண வியாபார ஸ்தாபனங்கள் பணத்தை பெறுகின்றனர் மற்றும் வறிய நாடுகள் கடனை மீளச்செலுத்தும் பொழுது அரசாங்கங்கள் கொடுப்பனவுகளுக்கான வட்டியை பெறுகின்றனர்.

# அணைக்கட்டின் தாக்கங்கள்



ஆபிரிக்காவின், லெசொத்தோவில் மெலிசெமிலோ டிடியன் அவரின் காணியில் பாரிய நீர் விநியோக அணைக்கட்டை நிர்மாணிப்பதற்கான திட்டத்தை முதலாவதாக கேள்விப்பட்டவுடன், அவர் எதிர்த்தார். பல மக்களின் வாழ்க்கையை சிறப்பாக அமைப்பதற்கு ஒரு சில மக்கள் மட்டுமே விட்டு வெளியேற வேண்டுமென அணைக்கட்டு நிர்மாணிப்பாளர்கள் அவரை நம்பச் செய்தனர். அவர்கள் மெலிசெமிலோ மற்றும் அவரின் சமூகத்திற்கு நட்டயீடு, நீர் விநியோகம், பாடசாலை மற்றும் புதிய வீடுகளையும் வழங்குவதாக உறுதி செய்தனர்.

ஆனால் அந்த உறுதியை நிறைவேற்றவில்லை. " எமது நிலங்களுக்காக போதிய அளவு நட்டயீட்டை பெறாவிட்டால், அது எமது பிள்ளைகளின் சாவுமணியாகவும் மற்றும் எதிர்கால சந்ததியினரின் சாவுமணியாகவும் இருக்கும் ஏனெனில் அவர்களின் எதிர்காலத்தில் உயிர் வாழ்வதற்கு உதவுவதற்காக எதுவுமே இருக்காது" என மெலிசெமிலோ கூறினார்.

இது வெறுமனே மெலிசெமிலோவின் கதை மட்டுமில்லை. 40 முதல் 80 மில்லியன் வரையிலான மக்கள் அணைக்கட்டுகளை கட்டுவதற்காக தாங்களின் வீடுகள் மற்றும் காணிகளிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டுள்ளனர். இந்த மக்களில் பெரும்பாலானோர் தற்பொழுது வறியவர்களாகியுள்ளனர். அவர்களின் வாழ்தாரம், கலாச்சாரங்கள மற்றும் சமூகங்கங்கள் அழிக்கப்பட்டுள்ளது.
உலகில் சாரமான பண்ணை நிலங்கள் மற்றும் மிக முக்கியமான விலங்குகளின் வாழவிடங்களிலும் அணைக்கட்டுகள் மூல்கடிக்கிறது. ஆறுகள் முற்றிலும் அழிக்கப்பட்டுள்ளது. ஒரு சில் மீனினம், விலங்குகள் மற்றும் தாவர வகைகள் காணாமல் போயுள்ளது.

இந்த அத்தியாயம் இயற்கை வளங்கள் மற்றும் அணைக்கட்டுகளால் சமூகத்திற்கு ஏற்படும் தாக்கங்கள் போன்றவற்றைப் பற்றி விளக்குகிறது. இடம்பெயர்ந்து அணைக்கட்டுகளின் கீழ் பகுதிகளில் வசிக்கும் குடும்பங்களுக்கு அணைக்கட்டுகளால் ஏற்படும் குறிப்பிடத்தக்க தாக்கங்களைப் பற்றி நாங்கள் பரிசீலனையை மேற்கொண்டோம். அதன் பிறகு, பாரிய அணைக்கட்டினால் வாழ்க்கையையும் வாழ்வாதரத்தையும் பாதுகாக்க லெசொத்தோவிலுள்ள சமூகங்கள் என்ன செய்கிறார்கள் என நாங்கள் கலந்துரையாடினோம்.



# அணைக்கட்டின் தாக்கங்கள்





**அணைக்கட்டுகள் மீன்களை கொன்று மீன்பிடித தொழிலை சீரழிக்கின்றன**

மீன்கள் அணைக்கட்டுகளை கடந்து செல்ல முடியாதலால் மேல் நீரோட்டங்கில் மீன்களின் தொகை குறைவடைகிறது. அணைக்கட்டுகளுக்கு கீழ் பகுதியில், நீரோட்டம் மற்றும் தரம் மாற்றங்களினால் மீனினம் அழிக்கப்படுகின்றது. மீனை உணவிற்காகவும் வருமானத்திற்காகவும் நம்பியிருக்கும் மக்கள் பாதிப்பிற்குள்ளாகின்றனர்.

**அணைக்கட்டுகள் தனவந்தர்களுக்கு வலுச்சக்தியையும் நீரையும் வழங்குகிறது**

கிராமிய விவசாயிகளும் மீனவர்களும் பாவிக்கும் ஆற்று நீரை அணைக்கட்டுகளும் நீர்த்தேக்கங்களும் எடுக்கிறது. அவை மின்சாரம் மற்றும் நீரை யார் இந்த சேவைகளுக்கு பணம் செலுத்த முடியுமோ அவர்களுக்கு வழங்குகின்றனர்.

**பயிர் அறுவடை வீழ்ச்சி அடைகிறது**

அணைக்கட்டுகள் கீழ் நீரோட்டத்திலுள்ள சிறந்த விவசாய நிலங்களை வெள்ளத்தால் மூழ்கடிக்கிறது மற்றும் வணடலினால் சாரமான பயிர்களை தடை செய்கிறது. நீர்த்தேக்கத்திலிருந்து விடுவிக்கப்படும் நீர் ஆற்றங்கரையோர தோட்டங்களை அடித்துச் செல்கிறது.

**அணைக்கட்டுகள் மாசடைந்த நீரை வெளிச்செலுத்தும்**

கிழ் நீரோட்டத்திலுள்ள மக்களுக்கும் கால்நடைகளுக்கும் தரம் குறைந்த நீர் நோயை ஏற்படுத்தும்.

# ❖ புலம்பெயர்வதற்கான உண்மை நிலை

## புலம் பெயர்ந்த சமூகங்கங்கள் கஸ்டப்படுகின்றனர்

மக்களை தாங்களின் வீடுகளிலிருந்து பலவந்தமாக **புலம்பெயர** வைப்பதே அணைக்கட்டினால் ஏற்படும் பாரிய தாக்கங்களில் ஒன்றாகும். மக்கள் வாழும் நீர்த்தக்க வெள்ள பிரதேசங்களில், பயிர்கள், மீன்களை வளர்க்கின்றனர் மற்றும் கால்நடைகளை வளர்க்கின்றனர். ஒருசில வேலைகளில் மக்கள் பல ஆண்டுகளாக இந்த காணிகளில் பல பரம்பரையாக வசிக்கின்றனர். அவை அணைவற்றிற்கம் அப்பால், அரசாங்கங்களும் அணைக்கட்டுபவர்களும் மக்களை தாங்களின் காணிகளிலிருந்தும் வீடுகளிலிருந்தும் பலவந்தமாக வெளியேற்றுகின்றனர். முழு கிராமங்களுமே வெள்ளத்திற்கு உள்ளாகிறது.



*அணைக்கட்டுகளால் உலகளாவிய ரீதியில் 40-80 மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.*

புலம்பெயர்தல் பல மக்களை வறியவர்களாக்கின்றது. அவர்களுக்கு போதிய அளவு உணவை உண்பதற்காக பெற்றுக்கொள்வதிலும் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு உதவுவதற்காக வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கும் பிரச்சினையாக உள்ளது. அவர்களுக்கு தொடர்ச்சியாக விவசாயத்திலும் மீன்பிடிப்பதிலும் தங்கி வாழ இயலாமலுள்ளது. கிராமிய சமூகங்கள் நகரங்களக்கும் நகர்புறங்களுக்கும் பலவந்தமாக நகர்கின்றனர் அவர்கள் புதிய வாழ்க்கை தத்தெடுக்கின்றனர். நகரங்களில், போதைப்பொருள் மற்றும் குற்றச்செயலகள் போன்ற புதிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர்.

பலம்பெயர்வு சமூகங்களின் கலாச்சாரம் மற்றும் சமூகங்களை அழிக்கிறது. பெரும்பாலும் கிராமங்கள் பிரிக்கப்படுகின்றது மற்றும் தனிமைப்படுத்தப்படுகின்றது அதனால் மக்கள் தாங்கின் நண்பர்க் மற்றும் உறவினர்களுடன் சமீபமாக வாழ முடியாத நிலை ஏற்படுகிறது. ஆதிவாசி மக்கள் மற்றும் சிறுபான்மை இனத்தவர்களே அணைக்கட்டு நிர்மாணிப்பதால் தொடர்ச்சியாக பாதிப்பிற்குள்ளாகின்றனர்.முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் மற்றும் மூதாதையர்களின் கல்லறைகள் போன்றவை வெள்ளத்தில் மூல்குகின்றன. மக்கள் அவர்களின் மூதாதையர்களின் காணிகளுடனான தொடர்பை இழக்கின்றனர்.



*அணைக்கட்டுகளால் பாதிக்கப்பட்ட மக்கள் சார்மற்ற அல்லது விவசாயம் செய்வதற்கு மிக பள்ளமான காணிகளுக்கே நகர்த்தப்பட்டுள்ளனர்.*

லாவோசின் ஹயுஹெ ஓ அணைக்கட்டிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட நயா ஹியுன் இனத்தைச்சேர்ந்த ஒருவர் கூறுகையில், "ஒருசில மக்கள் அவர்கள் வெளியேறும் பொழுது தொடர்ச்சியாக நோய்வாய் படுகின்றனர். இது தாங்களின் சொந்த இடமில்லை என்று அவர்கள் நினைக்கின்றனர். இது வேறொரு நாட்டிற்கு பெயர்வது பொலாகும். எமது எண்ணத்திலிருந்து வீடு, எமது எண்ணத்திலிருந்து காணி சீரழிக்கப்பட்டுள்ளது."

## மீள் குடியேற்றத்தினால் ஏற்படும் பிரச்சினைகள்

அணைக்கட்டுகளினால் புலம்பெயர்ந்த சில மக்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டது. இது **மீள் குடியேற்றம்** எனப்படும். மக்கள் ஏற்கனவே இருக்கின்ற கிராமங்களுக்கும் அல்லது அணைக்கட்டினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக மட்டுமே கட்டப்பட்ட புதிய கிராமங்களுக்கும் சென்றிருக்கலாம்.

மீள் குடியற்றத்திற்கு பிறகு மக்களின் வாழ்க்கை நிலைமை நன்றாக அமையும் என அணைக்கட்டு நிர்மானிப்பாளர்கள் அடிக்கடி உறுதி செய்கின்றனர். அவர்கள் மின்சாரத்துடனான பெரிய வீடுகள், நீர் மற்றும் தொழிலை அந்த மக்கள் பெறுவார்கள் என உறுதி செய்கின்றனர். எவ்வாறாயினும், இந்த உறுதி மொழிகள் பொதுவாக தகர்த்தெறியப் படுகின்றது. அந்த வீடுகள் பெரும்பாலும் சிறியனவாகவும் பலவீனமாக கட்டப்பட்டதாகவும் இருக்கிறது. மின்சார மற்றும் நீருக்கான கட்டணத்தை மக்களால் செலுத்த முடியாதுள்ளது. பொதுவாக அவர்களிடம் முன்பிருந்த காணிகளுக்கும் பார்க்க குறைந்த காணிகளையே பெறுகின்றனர். அவரர்களின் பழைய காணிகளையும் பார்க்க புதிய காணிகளில் விவசாயம் செய்வ மிக கடினமாக உள்ளது.

மீளக் குடியமர்த்தப்பட்ட மக்களால் ஏற்கனவே செய்தது போல விவசாயம் அல்லது மீன்பிடி அல்லது கால்நடை வளர்ப்பை பெரும்பாலும் மேற்கொள்ள முடிவதில்லை. ஒருசில வேலைகளில் அணைக்கட்டு நிர்மாணிப்பாளர்களால் அந்த மக்களை மாடு மேய்த்தல் அல்லது விளையும் பொருட்களை சந்தைகளில் விற்பது போன்ற புதிய வாழ்வாரத்தை ஸ்வீகாரம் செய்து கொள்ளுமாறு ஊக்குவிக்கின்றனர். எவ்வாறாயினும், இதுபொதுவாக தோல்வியானதாகவும் மற்றும் முன்பு வாழ்ந்ததை விட வாழ்க்கை மிக கடினமானதாகவும் அமைகிறது.

## பெரும்பாலானோருக்கு போதிய அளவு நட்டயீடு கிடைப்பதில்லை




மக்கள் இழந்தவற்றை மீளப்பெறுவதற்காக வழங்கப்படும் பணம் அல்லது ஏனைய பொருட்களை வழங்குவதே **நட்யீடாகும்**. மக்களுக்கு பணமாக நட்டயீடு வழங்கும் பொழுது பெரும்பாலும் அவை அவர்கள் வாழ்வதற்கு போதிய அளவாக வழங்கப்படுவதில்லை. பணத்திற்கு பலக்கப்படாத மக்கள், நீண்ட காலத்திற்காக பணத்தை எவ்வாறு தெவது என்பது தொடர்பாக அவர்களுக்கு தெரியாமல் இருக்கலாம்.

பெரும்பாலான மக்களக்கு நட்டயீடு கிடைப்பதில்லை. அவர்கள் வாழும் இடங்கள் சட்ட ரீதியாக அந்த மக்களுக்கு சொந்த மில்லையாதலால் அவர்களுக்கு நட்டயீட்டை பெரும் உரிமை இல்லை என அரசாங்கம் மக்களுக்கு கூறுகின்றனர். சமூகங்கள் காணிகளை பகிர்ந்து கொள்கிறது அல்லது ஏனையோருக்கு சொந்தமான காணிகளிகளில் ஒருசில மக்கள் விவசாயம் செய்கின்றனர். அல்லது அவர்கள் அணைக்கட்டுகளால் பாதிப்பிற்குள்ளானவர்கள் என அரசாங்கம் சிந்திக்காமல் இருக்கலாம்.

“ அரசாஙக் உத்தியோகத்தர்கள் எமக்கு கூறினர், பெரிய வீடுகளை பெற்றுக் கொள்வதற்காக உங்களின் சிறிய வீடுகளை கைவிடுங்கள்” என ஷியாங் கியு லோ கூறினார், அவர் சீனாவின் க்யாவோல்ஹுங்டி அணைக்கட்டினால் மீள் குடியேற்றப்பட்டவர். “ அவர்கள் எமது சகல விவசாய காணிகளையும் மாற்றித்தருவதாகவும் எமது வீட்டிற்காக ஒரு சதுர அடிக்கு பதினைந்து சதம் வீதம் பெற்றுத்தருவதாகவும் உறுதி கூறினர். ஆனால் இது வரையில், பணத்தையோ அல்லது எதனையுமோ எனக்கு பெற்றுக்கொடுக்கவில்லை. மற்றும் எமது குடும்பத்திற்கு, ஒவ்வொருவருக்கும் அரை ஏக்கர் சிறந்த தரத்திலான விவசாய நிலங்கள் இருந்தது, நாங்கள் ஷியாங் யுவானுக்கு பெயரும்பொழுது மிகவும் குறைந்த தரத்திலான அரைவாசி காணிகளே எமக்கு வழங்கப்பட்டது.”

## ❖ கீழ் நீரோட்டத்தால் மில்லியன் கணக்கான மக்கள் பாதிப்படைகின்றனர்

அணைக்கட்டுகள் கீழ் நீரோட்ட பகுதிகளில் வசிக்கின்ற மில்லியன் கணக்காக மக்களின் வாழ்வாதாரத்தை அழித்துள்ளது. மீன்பிடி மற்றும் விவசாயங்களக்கே பாரிய தாக்கம் ஏற்பட்டுள்ளது.



பிரேஸிலின் டியுக்குருய் அணைக்கட்டு நிர்மாணிக்கப்பட்ட பின் கீழ் நீரோட்டத்தில் மீன்பிடிப்பாளர்கள்
60 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது.

**மீன்பிடி அழிக்கப்பட்டுள்ளது**

**அணைக்கட்டின் மேல்**

நீரோட்டப்பகுதியிலுள்ள மீன்கள் தாங்களின் வசிப்பிடங்கள் மற்றும் முட்டையிடும் இடங்களை அடைவதை தடை செய்யப்படுவதாலும் நீராட்டம் மாற்றமடைவதாலும் அணைக்கட்டுகள் மீன்களை அழிக்கிறது. மீன் இனங்கள் பெரும்பாலும் குறைகிறது. ஒருசில வர்க்கங்கள் இல்லாமல் போகிறது. இதன் விளைவாக, மக்கள் மிக முக்கியமான புரோட்டின் மூலங்களையும் வருமானத்தையும் இழக்கின்றனர். அவர்கள் அவர்களின் பாரம்பரிய வாழ்க்கை முறையையும் இழக்கின்றனர்.

**அறுவடை குறைவடைகிறது**

அவர்களின் பயிர்களுக்கு பாதிப்பு ஏற்படுவதால் மக்கள் சிரமங்களுக்கு உள்ளாகலாம். அணைக்கட்டுகளின் கழ்பகுதியில் நீரோட்டத்தின் மாற்றத்தால் ஆற்றங்கரைகள் கரையலாம். ஒருசில வேலைகளில் மக்களின் ஆற்றங்கரையோர தோட்டங்கள், காணி மற்றும் பயிர்கள் ஆற்றிற்குள் அடித்து செல்லலாம். வெள்ளத்தின் பின் ஆறுகள் மிக முக்கியமான புரதங்களையும் சாரமான நிலங்களின் வண்டல்களையும் எடுத்துச் செல்கிறது. அணைக்கட்டுகள் புரதங்களும் வண்டலும் கிழ் நீரோட்டத்திற்கு அடித்துச்செல்வதை தடுக்க வேண்டும். அந்த புரங்கள் இல்லாவடில், பயிர்களின் அறவடை குறைவடையலாம். மக்கள் இரசாயண பசளைகளை வாங்கலாம். அது மிகவும் செலவானது, மக்கள் விவசாயத்தை நிறுத்தலாம்.

### சுத்தமான நீருக்கு தட்டுப்பாடு

அணைக்கட்டுகளுக்கு கிழ் நீரோட்டத்தின் நீர் பெரும்பாலும் அசுத்தமானதாகவும் மாசடைந்ததும் காணப்படுகின்றது. விசேமாக நீரோட்டம் குறைவடையும் சமயங்களில், அந்த நீரை பருகுவதால் மக்களும் மிருகங்களும் நோய்க்குள்ளாகலாம். மக்கள் ஆறுகளில் குளித்தால் சொறி மற்றும் தோல் வியாதிகளுக்கு உள்ளாகலாம். பயிர்களுக்காக குறைந்த நீரே கிடைக்கிறது.

### உடனடியாக திறந்து விடப்படுவதால் பாதிப்புகளை ஏற்படுத்தும்

நீர்த்தேக்கங்களிலிருந்து உடனடியாக நீரை திறந்து விடுவதற்கு அணைக்கட்டு இயக்கவிப்பாளர்கள் ஒருசில வேலைகளில் தீர்மானிக்கலாம். நீர் மட்டம் துரிதமாக அதிகரிக்கலாம். மக்கள் பாவிக்கும் ஆறுகளுக்கு எந்த விதமான அறிவித்தல்களும் விடுக்கப்படாமலிருக்கலாம். அவர்களின் வள்ளங்களும் மீன்பிடி உபகரணங்களும் பெருகிவரும் நீரில் அடித்துச் செல்லலாம். ஒருசில வேலைகளில், மக்களும் நீரில் மூல்கலாம்.



யாழி நீர் வீழ்ச்சி அணைக்கட்டை நிர்மாணித்த பின், கம்போடிய கிராமத்தவர்கள் சீ சேன் ஆற்றில் நீராடினால் அவர்களுக்கு சொறி சிரங்கு போன்ற நோய்கள் ஏற்படுகிறது.

## லெசொத்தோவில் வறுமைக்கு எதிராக போராடும் சமூகங்கள்



லெசொத்தோவில் கட்சே அணைக்கட்டை கட்டுவதற்கு முன்பு, உள்ளூர் மக்கள் பயிர்களை வருடம் முழுவதுவும் பயிரிட்டனர். அவர்கள் வட்டக்காய், பெயார்ஸ், போஞ்சி, உருளைக்கிழங்கு மற்றும் வேறு மரக்கறிகளை பயிரிட்டனர். அவர்களின் பெரிய நிலங்கள் ஏனையோருடன் பகிர்ந்து கொள்ளும் அளவிற்கு பொதிய அளவு உணவை உற்பத்தி செய்தது.

அவரகள் மீள் குடியமர்த்தப்பட்ட பின், சமூகங்கள் வறியவர்களாகினர். புதிய வாழ்வாதாரம் மற்றும் நட்டயீட்டுக்காக வழங்கப்பட்ட உறுதிகள் தகர்த்தெறியப் படுகிறது. சில வேலைகளில் ஒரு சில மக்கள் இறக்கின்றனர்.

“மீள் குடியேற்ற பகுதிகளில் வாழ்வது மிக கடினமாகும். நாங்கள் அணைத்தையும் காட்டு மரக்கறிகளைக் கூட பெற்றுக் கொள்வதற்கு கஷ்டப்படுகின்றோம். மொலிக்காலிக்கோவில், எங்களுக்கு வரடம் முழுவதிலும் உணவு இருந்தது. இங்கு, வருடம் முழுவதிலும் பட்டினியாக இருக்கிறோம்,” என கட்சே அணைக்கட்டினால் மீள்குடியமர்த்தப்பட்ட னநக்ஹொனோ மசிபடி கூறினார்.

சாதாரண நட்டயீட்டிற்காக லெசொத்தோ சமூகங்கள் இன்னும் போராடுகின்றனர். அவர்கள் அணைக்கட்டு நிர்மாணிப்பாளர்களிடம் முறைப்பாட்டை செய்தனர், அவர்களின் கருத்தை வெளிப்படுத்துவதற்காக போராட்டங்களை தயார் செய்தனர். 2005ம் ஆண்டு இறுதியில் அரசாங்க உத்தியோகத்தர்கள் அவர்களின் கோரிக்கைகள் அணைத்தையும் பெற்றுக்கொடுப்பதாக உறதி அளித்தனர். இந்த புதிய உறுதி மொழிகள் நிறைவேற்றப்பட்டதா?

உங்களின் பிரதேசத்தில் அணைக்கட்டு ஒன்று கட்டப்போவதாக கேள்விப்பட்டால், இதைப்போன்ற ஒரு கதையை ஞாபகப்படுத்திக் கொள்வது முக்கியமாகும். அண்மையில் அணைக்கட்டு ஒன்று கட்டினால் உங்களின் வாழ்க்கை எவ்வாறு மாறும் என்பதை சிந்தியுங்கள். உங்களின் குடும்பம், வாழ்வாதாரம், கலாச்சாரம் மற்றும் சமூகத்திற்கு எவ்வாறு பாதிப்பை ஏற்படுத்தும் என நினைத்துப்பாருங்கள்.

### கலந்துரையாடுவதற்கான வினாக்கள்:



# அழிவை ஏற்படுத்துகின்ற அணைக்கட்டுகளுக்கு எதிரான சர்வதேச இயக்கம்




அழிவை ஏற்படுத்துகின்ற அணைக்கட்டுகள் தொடர்பாக உலகளாவிய ரீதியில் மில்லியன் கணக்கான மக்கள் போராடிகின்றனர். பாகிஸ்தானின் மீனவர்கள், தாய்லாந்து விவசாயிகள் மற்றும் கௌதமாலாவின் பலங்குடி மக்கள் அணைக்கட்டுகளுக்காக போராடுகின்றனர். ஜப்பானில் சரவகலாசாலை பேராசிரியர்களும் உகன்டாவின் மனித உரிமைக்கான அரச சார்பற்ற நிறுவனங்களும் அணைக்கட்டுகளுக்காக போராடுகின்றனர். அவர்கள் மக்களின் வாழ்வாதாரத்தையும் இயற்கை வளங்களையும் பாதுகாத்துக் கொள்வதற்காக போராடுகின்றனர். மற்றும் அவர்களின் வாழ்க்கையில் பாதிக்கப்பட்டவற்றிற்காக திர்மானம் எடுப்பதில் பங்கு கொள்வதற்கான மக்கள் உரிமைக்காக அவர்கள் போராடுகின்றனர்.

மக்கள் பிராந்திய மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் மக்கள் சேர்ந்து செயற்படுவதால் இந்த யற்சிகள் மிகவும் செயற்திறனானதாக இருக்கும். இன்று, இதைப்போன்ற வலைபின்னல்கள் லத்தீன் அமெரிக்கா, கிழக்கு மற்றும் தென் கிழக்கு ஆசியா, தெற்காசியா, ஐரோப்பியா மற்றும் ஆபிரிக்கா போன்றவற்றில் இருக்கின்றது (மேலதிகமான தகவல்களுக்காக பிராந்திய தொடர்புகளுக்கான பகுதியை பார்க்கவும்). இந்த வலைபின்னல் அணைக்கட்டுகளால் பாதிக்கப்பட்ட மக்கள், மக்கள் அமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், ஆய்வாரள்கள் மற்றும் ஏனைய குழுக்களை உள்ளடக்கியுள்ளது. மக்கள் இந்த வலைபின்னலை தகவல்களை பகிர்ந்து கொள்ளவும், ஒன்றிணைந்து நடவடிக்கைகளை ஏற்பாடு செய்யவும் மற்றும் அணைக்கட்டுகளை நிறுத்துவதற்காக ஒன்றிணைந்து செயற்படவும் மற்றும் மக்களின் அடிப்படை மனித உரிமையை பாதுகாக்கவும் பாவிக்கின்றனர்.

அழிவை ஏற்படுத்துகின்ற அணைக்கட்டுகள் தொடர்பாக அனுபவங்களை பகிர்ந்து கொள்ளவும் தந்திரோபாயம் ஒன்றை அபிவிருத்தி செய்யவும் அணைக்கட்டு போராளிகள் இரண்டு சர்வதேச கூட்டங்களை ஏற்பாடு செய்தனர். 1997ல், 20 நாடுகளின் பங்குபற்றுநர்கள் பிரேசிலில் ஒன்று கூடினர். இரண்டாவது கூட்டம் 2003ல் தாய்லாந்தில் 61 நாடுகளிலிருந்து 300 பங்காளர்களுடன் இடம்பெற்றது. அந்த இயக்கம் தொடர்ச்சியாக வளர்ந்து பலமுள்ளதாகின்றது.

# அணைக்கட்டு போராளிகளின் வெற்றிகள்



**சிறிதளவு அணைக்கட்டுகளே கட்டப்பட்டன**

அணைக்கட்டுகள் கட்டப்படுவதை சரவதெச இயக்கம் வெற்றிகரமாக நிறுத்தியது. கடந்த காலத்துடன் ஒப்பிடும் பொழுது சிறிதளவு அணைக்கட்டுகளே நிர்மாணிக்கப்பட்டது. கடுமையான எதிர்ப்பின் காரணமாக, அரசாங்கங்கள் அணைக்கட்டு திட்டங்களை இரத்துச் செய்தது.



**ஒருசில அணைக்கட்டுகள் அளவு குறைக்கப்பட்டது**

இன்று, அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும், பல அணைக்கட்டுகளை அளவு குறைக்கப்பட்டது மற்றும் பல வருடங்களுக்கு முன்னபதாக கட்டப்பட்ட அணைக்கட்டுகளின் **உத்தரவு பத்திரம் நீக்கப்பட்டது**. ஆறுகள் வழமைக்கு திரும்புகின்றன. பிரான்சில், லயோரி மற்றும் லெகுவர் ஆறுகளில் அமைக்கப்பட்டிருந்த பல சிறிய அணைக்கட்டுகள் அண்மைக்காலங்களில் உத்தரவு பத்திரம் நீக்கப்பட்டது. அதற்கு பிறது அணைக்கட்டுகள் உடைக்கப்பட்டது; ஆறுகள் வழமைக்கு திம்பியது. செமன் மற்றும் ஏனைய மீன்கள் மீண்டும் ஆற்றின் மேலும் கீழும் நீந்தித்திரிய ஆரம்பித்தது.



**பாதிக்கப்பட்ட மக்களின் உரிமைகளை பாதுகாத்தல்**

அணைக்கட்டுகளால் பாதிக்கப்பட்ட பல மக்கள் அவர்களின் உரிமைகளை பாதுபாத்துக் கொள்வதற்காக வெற்றிகரமாக போராடுகின்றனர். ஒரு சில மக்கள் சிறந்த நட்டயீட்டை பெற்றுக் கொண்டனர். தீர்மானம் எடுக்கும் நடவடிக்கைகளில் ஒரு சிலர் பங்குபற்றினர். மற்றும் ஒரு சிலர் நீர்ப்பாசணம் நீர் மற்றும் மின்சாரத்தை பெற்றுக் கொண்டனர்.

பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் அவர்களின் நண்பர்களால் மேற்கொண்ட எதிர்ப்புகளால், அணைக்கட்டுகள் நிர்மாணிப்பதை மேம்படுத்துவதற்காக சர்வதேச வழிகாட்டி தற்பொழுது இருக்கிறது. இந்த வழிகாட்டி **அணைக்கட்டுகளுக்கான உலக ஆணைக்குழுவினால்** (WDC) மேம்படுத்தப்பட்டது. பாதிக்கப்படும் மக்களுடன் ஒப்பந்த மொன்றை செய்து கொள்ளாமல் அணைக்கட்டொன்றை கட்ட முடியாது என அந்த அணைக்கட்டுகளுக்கான உலக ஆணைக்குழு கூறுகிறது. பாதிக்கப்பட்ட மக்களுடன் நட்டயீட்டிற்காக சட்டரீதியான ஒப்பந்தங்கள் அணைக்கட்டு நிர்மாணிப்பார்களால் கையொப்பமிட வேண்டும். அந்த ஒப்பந்தங்கள் மீறப்பட்டால், அணைக்கட்டு நிர்மாணிப்பாளர்களுக்கு எதிராக பாதிக்கப்பட்ட மக்கள் சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுக்கக் கூடியதாக இருக்க வேண்டும். பெரும்பாலான அரசாங்கங்கள் இந்த வழிகாட்டியை ஸ்வீகரித்துக் கொள்ளவில்லை, ஆனால் அணைக்கட்டுகளால் பாதிக்கப்டும் மக்கள் இந்த வழிகாட்டியை ஒரு கருவியாக அவர்களின் உரிமைக்காக போராடும் பொழுது பாவிக்கின்றனர்.



**அணைக்கட்டுகளுக்கு குறைந்த பணம்**

அணைக்கட்டுகள் மிகவும் செலவானவை. லத்தீன் அமெரிக்கா, ஆபிரிக்கா மற்றும் ஆசிய அரசாங்கங்கள் அணைக்கட்டுகளுக்கு செலுத்துவதற்காக பணத்தை பொதுமக்கள் அபிவிருத்தி வங்கி மற்றும் தனியார் வங்கிகளிடமிருந்து கடனாக பெருகின்றனர். இன்று, பெரிய அணைக்கட்டுகளுக்காக கடுமையான எதிர்ப்பு இருப்பதால், இந்த திட்டங்களுக்கு குறைந்த அளவு பணத்தையே கடனாக கொடுக்கிறது. இது அரசாங்கங்கள் அணைக்கட்டுகளை நிர்மாணிப்பதை கடினமாக்கி உள்ளது.

## ராசி சாலை அணைக்கட்டில் கிராமத்தவர்கள் வெற்றியை பெற்றனர்

200த்தில், தாய்லாந்தின் ராசி சாலை அணைக்கட்டின் கதவுகள் நிரந்தரமாக திறக்கப்பட்டது. இது அணைக்கட்டால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான பாரிய வெற்றியாகும்.



ராசி சாலை அணைக்கட்டு 15,000க்கு மேற்பட்ட மக்களின் விவசாய நிலங்கள் வெள்ளத்தால் மூல்கின. இது மீனினங்னளின் இடம்பெயரும் வழியை தடை செய்தது மற்றும் சதுப்புநில காடுகள் வெள்ளத்தில் மூல்கியது. சகலருக்கும் இது அனர்த்தமாகும். பாதிக்கப்பட்ட மக்கள் போராடுவதற்கு தீர்மானித்தனர். அவர்கள் மக்களின் வாழ்வாதாரத்தையும் ஆற்றை பழைய நிலைமைக்கு கொண்டு வரவும் அந்த அணைக்கட்டின் கதவுகளை நிறந்தரமாக திறந்து விடுமாறு கோரிக்கை விடுத்தனர்.

அவர்கள் அவர்களின் கோரிக்கை தொடர்பாக கவனத்தை செலுத்துவதற்காக நீர்த்தேக்க பிரதேசத்தில் உள்ள கிராமத்தவர்களால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை ஏற்பாடு செய்தனர். அணைக்கட்டு கதவுகள் திறக்கப்படும் வரை அவர்கள் செல்வதில்லை என அவர்கள் கூறினர். ஒரு சந்தர்ப்பத்தில், எதிர்ப்பாளர்களை முன்னுக்கு வந்த நீர் சூழ்ந்து கொண்டது. இது பல வருட காலத்திற்கு தொடர்ந்திருந்தது. இறுதியில் அமந்த கிராமத்தவர்கள் வெற்றி பெற்றனர். தராய் அரசாங்கம் கதவை திறப்பதற்கு ஏற்றுக் கொண்டது. அதிலிருந்து, முன் ஆறு வழமை நிலைமைக்கு திரும்பியது. மக்கள் மீண்டும் ஆற்றோரங்களில் பயிர்செய்து மீன் பிடித்தனர். அவர்கள் அவர்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுத்தனர்.

ராசி சாலை இயக்கத்தின் தலைவர், பூபா கொங்தாம், அணைக்கட்டின் உத்தரவு பத்திரத்தை இரத்துச் செய்வதற்காக ஏன் அவர் போராடினார் என விளக்குகிறார். “நீண்டகால நடைமுறையில் எனது பேரப்பிள்ளைகளுக்கு உதவுவதற்காக சுற்றாடலை பாகாப்பதே ஒரே வழியாகும். அதை தான் அவர்களுக்காக நான் செய்கிறேன்.”

## ❖ வெற்றி அளித்தது.. ஆனால் இன்னும் அணைக்கட்டுகள் சமூகத்திற்கு அச்சுறுத்தலாக உள்ளது

இவை பெரிய வெற்றிகளாகும். ஆனால் இன்னும் நிறைய செய்ய வேண்டியுள்ளது. உலகளாவிய ரீதியில் பல நாடுகளில், அழிவை ஏற்படுத்துகின்ற அணைக்கட்டுகள் அரசாங்கங்களால் இன்னும் நிர்மாணிக்கப்படுகின்றன. நீர்த்தேக்கங்கள் மற்றும்அணைக்கட்டுகளுக்காக பல மக்கள் அவர்களின் வீடுகளையும் காணிகளையும் இழக்கின்றனர். பல பலம் படைத்த அரசாங்கங்கள், வங்கிகள், வியாபார ஸ்தாபனங்கள் மற்றும் அபிவிருத்தி வங்கிகள் மேலதிக அணைக்கட்டுகளை நிர்மாணிப்பதற்காக பெரிய திட்டங்களை வைத்துள்ளனர்.

- அழிவை ஏற்படுத்துகின்ற அணைக்கட்டுகளுக்கு எதிராக போராட்டத்தை நாங்கள் திடப்படுத்த வேண்டும்.
- நாங்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும், அணைக்கட்டினால் பாதிக்கப்பட்ட மக்களின் உரிமைகளை பாதுகாக்க ஒருவருக்கொருவர் உதவ வேண்டும் ஒருவரிடமிருந்து ஒருவர் கற்றுக்கொள்ள வேண்டும்.

அணைக்கட்டுகளுக்கெதிராக பல மக்கள் ஒன்றிணைந்த போராடினால், அணைக்கட்டுகளை நிர்மாணிப்பதற்கும் சமூகங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதற்கும் அரசாங்கங்களுக்கும் வியாபார ஸ்தாபனங்களுக்கும் கடினமாக இருக்கும்.

# அணைக்கட்டுகளுக்காக எவ்வாறு போராடுவது

உங்களின் உரிமைக்காக போராடவும் மற்றும் அணைக்கட்டுகளுக்காக போராடவும் நீங்கள் பல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். முதலாவது கட்டமாக இந்த அணைக்கட்டு தொடர்பாகவும் மற்றும் உங்களின் சமூகத்திற்கு என்ன மாதிரியான தாக்கங்களை ஏற்படுத்தும் போன்ற தகவல்கள்களை சேகரித்தல். அடுத்து என்ன வேண்டும் என்பதையும் மற்றும் அதை எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பதையும் புரிந்து கொள்ளல். அதற்குப் பிறகு அந்த இலக்கை அடைவதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்கலாம். இந்த நடவடிக்கையை போராட்டம் என பெரும்பாலும் கூறப்படுகிறது.

முடிந்தளவு ஆரம்பக் கட்டத்திலேயே உங்களின் போராட்டத்தை மேற்கொள்வது மிக முக்கியமாகும். தகவல்களை சேகரித்தல் மற்றும் விநியோகித்தல், உங்களின் சமூகத்திலுள்ள ஏனைய மக்களுடனும் மற்றும் தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச குழுக்களுடன் ஒன்றிணைந்து செயற்படல் போன்றவை உள்ளடங்களாக சில முக்கியமான நடவடிக்கைகளை உங்களின் போராட்ட காலம் முழுவதிலும் நீங்கள் மேற்கொள்ள வேண்டும்.

ஒரு சில நாடுகள், அணைக்கட்டுகள் சமூக அங்கத்தவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு அபாயகரமானதாக அமையலாம் என எதிர்ப்பு போராட்டங்களை ஏற்பாடு செய்கின்றனர். ஒருசில வேலைகளில் அரசாங்கத்தையோ அல்லது அணைக்கட்டு நிர்மாணிப்பு திட்டத்தை விமர்சிப்பது ஒருசில வேளைகளில் அபாயகரமானதாக இருக்கும். உங்களின் போராட்ட தந்திரோபாயத்தை அபிவிருத்தி செய்யும்பொழுது அந்த அபாயங்களைப்பற்றி அறிந்து பொள்வது முக்கியமாகும்.




இந்த அத்தியாயம் போராட்டத்திற்கான தந்திரோபாயத்தை எவ்வாறு தயாரிப்பது தொடர்பான ஆலோசணையை உங்களுக்கு வழங்குகிறது. அணைக்கட்டு நிர்மாணிக்கும் நடவடிக்கைகளில் முழுமையாக உங்களால் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளை தொடர்ச்சியாக செயற்படுத்த வேண்டும். இறுதியாக, அணைக்கட்டு நிர்மாணிப்பின் மூன்று கட்டங்கள் மற்றும் ஒவ்வொரு கட்டத்திலும் உங்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான முக்கியமான கட்டங்களை இனங்காட்டுகிறது.

## ❖ உங்களின் ஆர்ப்பாட்டங்களை திட்டமிடுதல்

### 1. தகவல்களை சேகரித்தல்

உங்களது சமூகத்தையும் மற்றும் ஆற்றறையும் அணைக்கட்டு எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை அறிவது முக்கியமாகும். உங்களின் சமூக அங்கத்தவர்களிடமிருந்து தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக **கள ஆய்வை** நீங்கள் பாவிக்கலாம். அரச சார்பற்ற நிறுவன மற்றும் சர்வகலாசாலை ஆய்வாரள்கள் மற்றும் வேறு குழுக்கள் உங்களுக்கு உதவலாம். இதைப்பற்றி நினைப்பதற்காக ஒரு சில வினாக்கள்:

- ➢ நீர்ததேக்க மற்றும் அணைக்கட்டுகளால் எந்த கிராமங்கள் மற்றும் காணிகள் பாதிக்கப்படும்?
- ➢ எத்தனை பேர் விட்டுச்செல்ல வேண்டும்?
- ➢ எத்தனை பேர் தாங்களின் மீன்பிடிபிரதேசங்களையும் விவசாய இடங்களையும் இழப்பர்?
- ➢ அவர்கள் இழக்கும் காணி, பயிர்கள், வீடுகள், மற்றும் /அல்லது மீன்பிடியின் மதிப்பு என்ன?
- ➢ எந்த நட்டயீடு அல்லது மீள்குடியேற்றங்கள் முன்மொழியப்பட்டது.
- ➢ யார் அணைக்கட்டை அபிவிருத்தி செய்கின்றனர்? அது அரசாங்கமா, ஒரு தனியார் வியாபார ஸ்தாபனமா அல்லது இருவருமா?
- ➢ யார் அணைக்கட்டுக்கு பணம் செலுத்துகின்றனர்?

2. உங்களின் இலக்கு என்ன?

உங்களின் இலக்கை அடைவதற்காக அடுத்த கட்டமாக உங்களின் இலக்கை வெளிப்படுத்தி மற்றும் இலக்கை அடைவதற்காக தந்திரோபாயத்தை அபிவிருத்தி செய்து உங்களின் போராட்டத்தை ஏற்பாடு செய்யுங்கள். இதைப்பற்றி சிந்திப்பதற்கான ஒரு சில விடயங்கள்:

- ➢ நீங்கள் எதை அடைய இருக்கின்றீர்கள்?
- ➢ உங்களுக்கு அணைக்கட்டை நிறுத்த வேண்டுமா?
- ➢ உங்களுக்கு சிறந்த நட்டயீடு தேவையா?
- ➢ உங்களின் சமூகத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் அணைக்கட்டைப்பற்றி தீர்மானங்களை உங்களுக்கு தெரிவிக்க இருக்கிறதா?




உங்கள் சமூக அங்கத்தவரகளுடன் உங்களின் இலக்கை பகிர்ந்துகொண்டதை உறுதி செய்து கொள்ளவும். உங்களது போராட்டத்தின் கோரிக்கைகளாக இலக்குகளை பிமாற்றிக் கொள்ளலாம். உதாரணமாக: "ஒக்காவங்கோ அணைக்கட்டை நிறுத்து" அல்லது ஒக்காவங்கோ சமூகத்திற்கு கூடுதலான நட்டயீடு"

### 3. யார் உங்களின் நண்பர்கள் மற்றும் யார் உங்களின் விரோதிகள்?

உடன்பாடுகளை கட்டியெழுப்புவதே போராட்ட தந்திரோபாயத்தின் மிகவும் முக்கியமான அங்கமாகும். உங்களின் போராட்டத்திற்காக யார் உதவலாம் என்பதையும் சிந்திக்கவும். உங்களின் சமூகத்திலிருந்து, பொதுமக்களிடமிருந்து மற்றும் ஏனைய குழுக்களிடமிருந்து எவ்வளவு ஆதரவை கட்டியெழுப்புகிறீர்களோ அதிலேயே உங்களின் வெற்றி தங்கி நிற்கிறது.

உங்களின் விரோதிகள் யார் என சிந்தியுங்கள். அவர்களின் பலவீனங்கள் பலங்கள் என்ன? உங்களை எதிர்ப்பதற்கு அவர்களால் என்ன செய்ய முடியும்? ஏனைய சமூக அங்கத்தவர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், அணைக்கட்டு வியாபார ஸ்தாபனங்கள் மற்றும் நிதி வழங்குநர்களை எதிர்ப்பாளர்கள் உள்ளடக்கிக்கொள்ளலாம்.

### 4. உங்களின் இலக்குகள் எவை?

உங்களுக்கு தேவையானவற்றை யாரால் கொடுக்க முடியும் என சிந்தியுங்கள். அணைக்கட்டு தொடர்பாக தீர்மானம் எடுப்பவர் யார்? அது உங்களின் அரசாங்கத்தின் மக்களாக இருக்கலாம். அது அணைக்கட்டு நிர்மாணிக்கும் வியாபார ஸ்தாபனமாக இருக்கலாம். அல்லது அபிவிருத்தி வங்கியைப் போன்ற, நிதி நிறுவனமாக இருக்கலாம். இவைகளே உங்களது இலக்கு. இலகுவாக செல்வாக்கு செலுத்தக்கூடிய உங்களின் இலக்குகள் எவை? உங்களின் அரசாங்கம் மிகவும் திறந்ததாக இல்லாவிடில், அணைக்கட்டு நிர்மாணிப்பாளர்களை அல்லது அணைக்கட்டு நிதி வழங்குநர்களை செல்வாக்கு செலுத்துவது இலகுவாக இருக்கும்.

### 5. உங்களின் எண்ணங்களின் இலக்குகளினால் என்ன தந்திரோபாயங்கள் மாற்றமடையும்?

உங்களின் கோரிக்கைகளுக்கு ஆதரவு தெரிவிக்கவும் மற்றும் அவர்களின் எண்ணங்களை மாற்றவும் உங்களின் இலக்குகள் எதை நம்பச் செய்யும்? போராட்டம் நற்பயன் அளிக்க கூடியதாக இருக்குமா? ஊடக அறிக்கைகள் அவர்களின் எண்ணங்களை மாற்றுமா? உங்களின் பாராளுமன்றம் அல்லது மாகாணசபைக்கான உங்களின் நடவடிக்கைகள் நற்பயன் அளிக்கக் கூடியதா? பொதுவாக நட்டயீட்டிற்கான நடவடிக்கைகள் மிகவும் வெற்றிகரமானவை. நடவடிக்கைகளுக்கான காலவரையறை பட்டியல்படுத்துங்கள். ஒவ்வொருவருக்கும் பொறுப்பான நடவடிக்கைகள் தொடர்பாக ஒவ்வொருவரும் புரிந்து வைத்துள்ளனரா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். இதுவே உங்கள் போராட்டத்திற்கான தந்திரோபாயமாகும்.



### 6. உங்களின் போராட்டத்திற்கு என்ன நிதி உங்களுக்கு தேவைப்படுகிறது?

சகல போராட்டங்களுக்கும் வளங்கள் தெவைப்படுகிறது, அது உதவிகளாக ஊர்வலங்களை ஏற்பாடு செய்வது மற்றும் அர்ப்பாடங்கள், ஒரு கணணி மின் அஞ்சலுடன், தொலைபேசி, அல்லது ஆர்ப்பாட்டத்திற்கான உபகரணங்களை அச்சிடுதல். பல குழுக்கள் தாங்களின் சமூக அங்கத்தவர்களின் அண்பளிப்பிலேயே தங்கியுள்ளது. ஏனைய நிதி வளங்களாக மன்றங்கள் உள்ளடங்களாக, நிதி முகவர்கள் மற்றும் உங்களின் நாட்டின் ஏனைய மக்கள். உங்களுக்கு நிதியை சேகரிக்க உதவி தேவைப்பட்டால், உங்களின் நாட்டின் ஒருசில பெரிய அரசசார்பற்ற நிறுவனங்களை தொடர்பு கொள்ளுங்கள். பணத்தை சேகரிப்பது தொடர்பாக எண்ணங்கள் அவர்களுக்கு இருக்கலாம்.




சகலரும் புரிந்து கொள்வதையும் ஏற்றுக்கொள்வதையும் உறுதி செய்து கொள்வதற்காக உங்களின் சமூகத்துடன் உங்களின் போராட்ட தந்திரோபாயங்கள் தொடர்பாக கலந்துரையாடுங்கள்.

## ❖ அணைக்கட்டுகளுக்காக போராடுவதற்கான முக்கிய தந்திரோபாயங்கள்

அணைக்கட்டு நிர்மாண நடவடிக்கைகள் சகல கட்டங்களிலும் ஒருசில தந்திரோபாயங்கள் நற்பயனள்ளதாக இருக்கலாம். உங்களின் ஆர்ப்பாட்டம் முழுவதிலும் உங்களால் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளுக்கான ஒருசில எண்ணங்கள்.




### ஒழுங்கு செய்தலும் ஊக்குவித்தலும்

உங்களின் போராட்டத்திற்கு பொதுமக்களின் ஆதரவை பெற்றுக்கொள்வதற்காக பாதிக்கபப்ட்ட மக்களை ஒழுங்கு செய்து ஊக்குவித்தல். பல மக்கள் ஒன்று சேர்வதின் மூலமாகவே உங்களின் ஆர்ப்பாட்டம் வெற்றி அடையும். சமூக அங்கத்தவர்கள் மத்தியில் முரண்பாட்டை ஏற்படுத்த அரசாங்கமும் அணைக்கட்டு நிர்மாணிப்பாளர்களும் பெரும்பாலும் முயற்சித்தனர். முன் கூட்டியே உங்களின் சமூகத்தினை ஒன்றினைத்து பலத்தை கட்டியெழுப்பினால், அது உங்களை பிரிப்பதற்கு அணைக்கட்டு நிர்மாணிப் பாளர்களுக்கு கடினமானதாக இருக்கும். உங்களின் சொந்த நிறவனத்தை உரவாக்கி மக்களை ஊக்குவிப்பது ஒரு வழியாகும்.

ஒரு வலை பின்னலை உருவாக்குவதன் மூலமாக ஏனைய நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளலாம். உங்களின் நாட்டில் அணைக்கட்டுகளுக்காக தேசி வலைபின்னல் உள்ளதா என தேடிப்பாருங்கள். உங்களின் ஆர்ப்பாட்ட தந்திரோபாயத்தை திட்டமிடுவதற்கும் எடுக்க வேண்டிய நடவடிக்கை தொடர்பாக கலந்துரையாடவும் கூட்டமொன்றை ஏற்பாடு செய்யுங்கள். அரச சார்பற்ற நிறுவனங்கள், புத்திஜீவிகள், ஆய்வாரள்கள், சட்டத்தரணிகள், மற்றும் தொழில்நுட்ப நிபுணர்கள் போன்றவர்களடன் உடன்பாடுகளை உருவாக்கள்.ஊர்வலங்கள், எதிர்ப்பார்ப்பாட்டங்கள், வேலை நிறுத்தங்கள், புறகக்கணிப்புகள் மற்றும் உங்களின் போராட்டம் தொடர்பான கவனத்தை ஈர்ப்பதற்காக தடைகளை ஏற்பாடு செய்தல். அனைக்கட்களுக்காக தீர்மானம் எடுக்கும் நிறுவனங்களை இலக்காகக் கொண்டால் இந்த நடவடிக்கைகள் மிக வெற்றிகரமானதாக இருக்கும். நகரங்களிலும் மாநகரங்களிலும் பொதுக்கூட்டங்களை ஏற்பாடு செய்யுங்கள்.

### தகவல்களை பகிர்ந்தளித்தல்

அணைக்கட்டுகள் மற்றும் உங்களின் சமூகங்களுக்கு மறைந்துள்ள தாக்கங்கள் தொடர்பாக அறிவூட்டலை ஏற்படுத்த கைப்பிரதிகள், சுவரொட்டிகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய பொருட்களை தயாரித்தல். இந்த பொருட்களை பாதிக்கப்பட்ட மக்கள், பொது மக்கள், நாடளாவிய ரீதியில் சுற்றாடல் மற்றும் மனித உரிமை குழுக்கள மற்றும் அரசாங்க முகவர்கள் போன்றோருக்கு பகிர்ந்தளிக்கலாம். உங்களின் வேண்டு கோள்களை பிரசித்தப்படுத்துவதற்கு இது ஒரு சிறந்த வழியாகும்.



## ஊடகங்களுடன் செயற்படல்



தொலைக்காட்சி, பத்திரிகை மற்றும் ஒலிபரப்பிகளை பாவித்து உங்களின் செய்திகளை வெளிப்படுத்துங்கள். இது உங்களின் கோரிக்கைகளுக்கு செவிமடுக்க அரசாங்கம் மற்றும் அணைக்கட்டு நிர்மாணிப்பாளர்களுக்கு அழுத்தத்தை ஏற்படுத்த உதவியாக இருக்கும். முன்பு சிறிய விடயங்களை எழுதிய ஊடகவியலாளர்களை அழைத்து உங்களின் கதைகளை அவர்களுக்கு கூறுங்கள். ஊடக மகாநாடொன்றை ஏற்பாடு செய்யுங்கள் ஊடகங்களை உங்களது நடவடிக்கைகளுக்காக அழையுங்கள். உங்களின் போராட்டங்கள் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு அறிவியுங்கள். உங்களின் செய்திகளை மாற்று வழிகளில் வெளியிடுவதற்காக அரச சார்பற்ற நிறுவனங்களையும் மற்றும் ஏனைய உதவிக் குழுக்களையும் கோருங்கள்.

## உங்களின் அரசாங்கத்தையும் நிதி வழங்குநர்களையும் ஆதரவு பேசுதல்

உங்களின் தீர்மானம எடுப்பவர்களை சந்தித்து உங்களின் கருத்துக்களை தெரிவியுங்கள் உங்களின் கோரிக்கைகளுக்கு ஆதரவு வழங்குமாறு உள்ளூர் மற்றும் தேசிய அரசாங்க உத்தியோகத்தர்கள், அல்லது பாராளுமன்ற அங்கத்தவர்களை நம்பச் செய்யவும். அணைக்கட்டு நிதி வழங்குநர்கள் உங்களின் அரசாங்கத்தின் தீர்மானம் எடுப்பவர்களை இலக்காகக்கொண்டு கடிதமெழுதும் ஆர்ப்பாட்டம் மற்றும் விஞ்ஞாபனத்தை ற்பாடு செய்தல். அந்த அணைக்கட்டுக்கான நிதியை தனியார் வங்கிகளோ அல்லது பொது மக்கள் அபிவிருத்தி வங்கியோ வழங்கினால் இந்த நிதி வழங்கநர்களை இலக்காகக் கொண்டு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களுடன் செயற்படவும்.

## சட்ட நடவடிக்கைகளை எடுத்தல்

பாதிக்கபப்ட்ட மக்களுக்கு சிறந்த நட்டயீடை பெறுவதற்கும், அணைக்கட்டுகளை நிறுத்துதல் அல்லது காலதாமதப்படுத்துவதற்கு ஒருசில வேலைகளில் சட்ட நடவடிக்கை யை பாவிக்கலாம். சட்டத்தரணி ஒருவரைத் தேடி அணைக்கட்டு நிர்மாணிப்பாளர்கள் ஏதாவது சட்டத்தை மீறுகிறார்களா என தேடிப்பாருங்கள். நல்ல விடயங்களுக்காக பல சட்ட நிறுவனங்கள் இலவசமாக செயற்படுவர்.

## முன்மொழியப்படும் மாற்றீடுகள்!

அணைக்கட்டுகளுக்கான மாற்றீடுகளை முன்மொழிவதற்கு விசேடத்துவ நிபுணர்களின் உதவியை பெற்றுக்கொள்ள முயற்சியுங்கள். (மேலதிக விபரங்களுக்காக அத்தியாயம் 5ஐ பாருங்கள்)

## பிளர் அணைக்கட்டை நிறுத்துவதற்காக பிரேசில் மக்கள் ஏற்பாடு செய்தனர்




1990களில், பிரேசிலின் மினாஸ் ஜெராய்ஸ் மாகாணத்தில் பிரங்கா ஆற்றில் சக்தி வாய்ந்த வெளிநாட்டு வியாபார ஸ்தாபனமொன்று அணைக்கட்டு ஒன்றை நிர்மாணிக்க திட்டமிட்டது. இந்த அணைக்கட்டினால் 133 விவசாய குடும்பங்கள் இடம்பெயர இருந்ததோடு மீன் பிடியும் அழிவடையும். கீழ் நீரோட்டத்தில் ஆற்று நீர் மட்டம் மாற்றமடைவதால் ஆயிரக்கணக்கான மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

உள்ளூர் குடியிருப்பாளர்கள், ஒரு அரச சார்பற்ற நிறுவனம், சர்வகலாசாலை ஆய்வாரள்கள் மற்றும் கிறிஸ்துவ தேவாலய குழுக்கள் ஒன்றிணைந்து பிளர் அணைக்கட்டுக்கு போராடுவதற்காக உடன்பாட்டை ஏற்படுத்தினர். அவர்களின் வாழ்க்கைக்கு அணைக்கட்டு எந்த விதமான தாக்கத்தை ஏற்படுத்தும் என தேடிப்பார்ப்பதற்கு இணைந்து செயற்பட்டனர். அவர்கள் வியாபார ஸ்தாபனத்தின் கற்கையை வாசித்து பல பிரச்சினைகளை கண்டு பிடித்தனர். அவர்கள் தகவல்களை அணைக்கட்டு சுற்றாடலுக்கான தாக்கத்தைப்பற்றி கவலையடைந்த அரசாங்க அதிகாரிகடன் பகிர்ந்து கொண்டனர்.

அணைக்கட்டுக்கன பொதுமக்கள் கோரலுக்கு தயார்படுத்துவதற்காக சமூகத்திற்கு ஆய்வாரள்களாலும் அரச சார்பற்ற நிறவனத்தாலும் சுற்றாடல் கற்கை தொடர்பாக விளங்கப்படுத்தப்பட்டது. முன்மொழியப்பட்ட உத்தியோகப்பூர்வ கற்கையில் அவர்களின் காணி, வாழ்வாதாரம் மற்றும் வளங்கள் தொடர்பான சொந்த நோக்கை ஒப்பிட்டு பார்ப்பதற்கு விவசாயிகள் உதவினர்.

பொதுமக்கள் கோரலுக்காக சமூகம் சிறந்த அளவில் தயார் செய்யப்பட்டது. பிரங்கா ஆறு தொடர்பாக பிள்ளைகள் பாட்டு பாடினர் மற்றும் குடியிரப்பாளர்கள் பதாதைகளை தாங்கியவாறு வியாபார ஸ்தாபனத்தை "போரா" (வெளியேறு) என்று கோசமிட்டனர். சமூகத தலைவர்கள் அவரகளின் சிரத்தையை வெளிப்படுத்த திடமான அறிக்கை ஒன்றை தயாரித்தனர். உள்ளூர் சமூகங்களின் அழுத்தம், வியாபார ஸ்தாபனத்திற்கான விமர்சனம், சுறறாடல் தாக்கவிளைவு கற்கை மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களின் கரிசனை போன்றவை வியாபார ஸ்தாபனத்தை அணைக்கட்டு திட்டத்தை இரத்துச்செய்ய அழுத்தத்தை ஏற்படுத்தியது.

பல ஆண்டுகளுக்கு பிறகு இன்னுமொரு வியாபார ஸ்தாபனம் புதிய அணைக்கட்டு ஒன்றை கட்ட முயற்சித்தது, மக்கள் மீண்டும் "வேண்டாம்" என கூறினர். அவர்கள் இடத்தை கைப்பற்றி வியாபார ஸ்தாபனம் அணைக்கட்டை அளக்க தொடங்கியது. 43 நாட்களுக்கு பிறகு, அந்த வியாபார ஸ்தாபனத்தின் தொழில்நுட்ப வியலாளர் சென்று விட்டார். அந்த சமூகசம் தேவைப்பட்டால் மீண்டும் செயற்படுவதற்காக தயார்படுத்தப் பட்டது.

## தாய் கிராம ஆய்வு




கடந்த சில வருடங்களாக, தாய் பர்மிய எல்லைப் புறத்தில் அமைந்துள்ள சல்வீன் ஆற்றிற்கு இருமருங்கிலும் வாழ்கின்ற மக்கள் ஆற்றை மறித்து அணைக்கட்டு ஒன்று கட்ட இருந்நதால் அரசாங்கத்திற்கு எதிராக போராடினர். ஆற்றை எவ்வாறு பாவிக்கிறார்கள் என அவர்களின் உள்ளூர் அறிவை பாவித்து ஆய்வொன்றை மேற்கொள்ள அவர்கள் தீர்மானித்தனர்.

2 1/2 ஆண்டுகளாக, தாய் கரென் இனமக்கள் 50 கிராமங்களில் மீனவர்கள், பாரம்பரிய மீன்பிடி செயற்பாடு, மூலிகைகள், மரக்கறி தோட்டங்கள் மற்றும் இயற்கை வளங்கள் தொடர்பாக தரவுகளை சேகரித்தனர்.

அரச சார்பற்'ற உத்தியோகத்தரகளும் தொண்டர்களும் தரவுகளை பதிவதற்காகவும் அறிக்கை தயாரிப்பதற்கும் மட்டும உதவினர் பிரதான ஆய்வாரள்களாக சமூக அங்கத்தவர்களே செயற்பட்டனர். கிராமத்தவர்கள் பல மீனினங்கள், மூலிகைகள் மற்றும் சாப்பிடக்கூடிய தாவரங்கள் ஆற்றோரங்களில் இருப்பதையும் அது அவை உணவிற்காக பாவிப்பதாகவும் இனங்கண்டனர். கிராமத்தவர்கள் ஆறும் வனமும் அவரகளின் வாழ்க்கைக்கு எவ்வளவு முக்கியமாக இருக்கிறது என்பதை ஆய்வின் மூலம் ஒப்புவிக்கப்பட்டது.

உங்களின் சொந்த ஆய்வை எவ்வாறு மேற்கொள்வது

**கட்டம் 1:** யார் ஆய்வின் பங்கெடுக்கிறார்களோ அவர்கள் அணைவருடனும் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்யுங்கள். முடிந்தளவு பாதிக்கப்பட்ட கிராமத்தவர்களின் பெரும்பாலான மக்களை அழையுங்கள். ஆற்றையும் உங்களது வாழ்வாதாரத்தையும் பாதுகாத்தல் மற்றும் ஆய்வில் என்ன செய்யப் போகிறீர்கள் என்பதை தீர்மானிக்கவும் சகல வழிகளையும் பற்றி கதையுங்கள்.

**கட்டம் 2:** ஆய்வை மேற்கொள்வதற்காக குழுக்களாக பிரியுங்கள். கற்கையை மேற்கொள்கின்ற பிரதேசத்தில் பரீட்சயம் பெற்ற மக்களை குழுக்களில் உள்ளடக்கவும். உதாரணமாக, மீனவர்கள் மீனவ ஆய்வை மேற்கொள்ள வேண்டும் மற்றும் மரக்கறி பயிர்ச்செய்கையாளர்கள் ஆற்றங்கரையோர தோட்டங்களின் ஆய்வை மேற்கொள்ள வேண்டும்.

**கட்டம் 3:** ஆய்விற்காக என்ன முறையை நீங்கள் பாவிக்க வேண்டும் என தீர்மானியுங்கள். இதோ சில ஆலோசணைகள்:

மீன்பிடித்தொழில்: ஆற்றை வலயங்களாக பிரியுங்கள். ஒவ்வொரு வலயத்திற்கும் மீன்பிடிப்பாளர் குழுக்களை நியமிக்கவும். அதன்பிறகு ஒவ்வொரு மீன்பிடிப்பு, வகைகளின் மாதிரியை தெரிவு செய்யவும். கூட்டமொன்றை ஏற்பாடு செய்யுங்கள் அதன் 5லம் மக்கள் ஒவ்வொரு வகைகளையும் அதன் உள்ளூர் பெயர்களில் இனங்கானுவர். ஆவைகளின் வாழ்விடங்கள், பெயர்வு முறை, அளவு, நிறை மற்றும் முட்டையிடும் முறை போன்றவற்றை அவர்களுடன் கதையுங்கள். உங்களிடம் புகைபப்படக்கருவி இருந்தால் பிடித்த ஒவ்வொரு வகையையும் படம் எடுங்கள். ஒவ்வொரு படத்தையும் புத்தகத்தில் ஒட்டி அந்த படங்களுக்கக் கீழே மீன்களின் தகவல்களை எழுதுங்கள்.

ஆற்றங்கரையோர தோட்டங்கள்: ஆற்றை வலயங்களாக பிரியுங்கள். ஒவ்வொரு வலயத்திற்கும், ஆற்றங்கரை நெடுக நடங்கள் மற்றும் ஒவ்வொரு ஆற்றங்கரை தோட்டங்களையும் அளவீட செய்யங்கள். யார் ஒவ்வொரு தோட்டத்திற்கம் உரிமையாளர்கள் யார் என எழுதிக் கொள்ளங்கள், மற்றும் எவ்வாறு மரக்கறிகளுக்காக பாவிக்கின்றனர் (உதாரணமாக, உண்பதுவும் விற்பதுவும்) மரக்கறிகள் சந்தையில் விற்பதாயின், அவர்கள் எவ்வளவுக்கு விற்கின்றனர் என்பதை எழுதிக் கொள்ளுங்கள்.

கட்டம் 4: உங்களின் கண்டு பிடிப்புகளை பதிவு செய்து கொள்ளுங்கள். தீர்மானம் எடுப்பவர்களை செல்வாக்கு செலுத்துவதற்காக அவற்றை எவ்வாறு பாவிப்பது என தீர்மானியுங்கள்.

## ❖ அணைக்கட்டு நிர்மானிக்கப்படும் ஒவ்வொரு கட்டத்திலும் உங்களால் என்ன செய்ய முடியும்

இந்த அத்தியாயம் அணைக்கட்டு நிர்மாணத்தின் மூன்று பிரதான கட்டங்களையும் மற்றும் ஒவ்வொரு கட்டத்திலும் நீங்கள் மெற்கொள்ள வேண்டிய குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளையும் விளக்குகிறது. முன் நிர்மாண கட்டம், நிர்மாண கட்டம் மற்றும் நடவடிக்கை கட்டம் ஆகிய மூன்றும் அணைக்கட்டின் பிரதான கட்டங்களாகும்.

## கட்டம் 1: முன் நிர்மாண கட்டம்

காலவரை : 2 முதல் 20 வருடம் வரை அல்லத அதற்கு மேல்.

### இந்த கட்டத்தில் என்ன நடக்கும் ?

அணைக்கட்டை நிர்மாணிக்கும் முன், அணைக்கட்டு நிர்மாணிப்பாளர்களால் பல கற்கைகளை மேற்கொண்டு இந்த அணைக்கட்டை நிர்மானிப்பது சாத்தியமானதா என திட்டங்களை அபிவிருத்தி செய்வார்கள். அதோடு அணைக்கட்டுகளின் தாக்கங்களையும் பார்க்க வேண்டும். இதைப்போன்ற பல கற்கைகளை மேற்கொள்வது வெளிநாட்டு வியாபார ஸ்தாபனங்களாகும்.



நிலத்தை அளப்பதற்கும் துளைப்பதற்கும் ஏற்பாடு செய்தல் பெரும்பாலும் உங்களின் பிரதேசத்தில் அணைக்கட்டுக்கான திட்டமிடுவதற்கான முதலாவது அறிகுறியாகும்

1. முன்-சாத்தியவள கற்கை. இந்த கற்கை அந்த அணைக்கட்டை நிர்மாணித்து நடைமுறைப்படுத்த முடியுமா என்பதை உறுதி செய்யும். அந்த இடம் அணைக்கடடிற்கு பொருத்தமானதா, எவ்வளவு மின்சாரம் அல்லது நீரை உற்பத்தி செய்ய முடியும் என்பதை மதிப்பிடுதல், மற்றும் அணைக்கட்டின் செவுத்தொகையை மதிப்பிடுதல் என்பவற்றை தீர்மானிக்கும்.

2. சாத்தியவள கற்கை மற்றும் விபரமான வடிவமைப்பு. இந்த கற்கை அணைக்கட்டை நிர்மாணிப்பதற்கு தேவையான காலநிலை, புவி அமைப்பு, ஆற்றில் எவ்வளவு நீர் இருக்கிறது போன்ற தகவல்களை பார்க்கிறது. அளவீடு செய்வதற்கும் மற்றும் நிலத்தினை துளைப்பதற்கும் பிரதேசத்திற்கு புதியவராக இந்தால் அவர்கள் பெரும்பாலும் சாத்தியவள கற்கையை மேற்கொள்வர்.

3. சுற்றாடல் தாக்க விளைவு மதிப்பீடு (EIA). அணைக்கட்டின் சுற்றாடல் தாக்கங்கள் தொடர்பாக சுற்றாடல் தாக் விவைு மதிப்பீடு பெரும்பாலும் பார்க்கும். இது அணைக்கட்டு ஏற்படுத்தும் சுற்றாடல் பிரச்சினைகளை அளவீடு செய்து கட்டுப்படுத்துவதற்கு முன்மொழியும். சுற்றாடல் தாக்கவிளைவு பெரும்பாலும் சுற்றாடல் பிரச்சினைகளை மட்டுப்படுத்தலாம் அணைக்கட்டை நிர்மாணிக்க வேண்டும் என்று தான் பெரும்பாலும் கூறுகிறது.

4. மீள் குடியேற்ற திட்டம்/சமூக அபிவிருத்தி திட்டம். இது நீர்த்தேக்க பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களை மீள் குடியேற்றுவதை திட்டமிடல் போன்றவையும் உள்ளடங்கும். இதில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டயீடு வழங்குவதுவும் உள்ளடங்கும். இந்த திட்டத்தில் பெரும்பாலும் அணைக்கட்டிற்கு கீழ் நீரோட்டத்தில் வசிக்கும் பாதிக்கப்பட்ட மக்களை இந்த திட்டத்திலிருந்து விடுவிக்கின்றனர்.

இந்த கற்கையை மேற்கொண்ட பின், அணைக்கட்டு நிர்மாணிப்பாளர்கள் அணைக்கட்டை நிர்மாணிப்பதற்கான பணத்தை பெற்றுக்கொள்வதற்காக அரசாங்கங்களையும் வங்கிகளையும் சந்திக்கின்றனர்.

## இந்த கட்டத்தில் நீங்கள் என்ன செய்யலாம்?

அணைக்கட்டு திட்டத்தை செல்வாக்கு செலுத்தக்கூடிய சிறந்த நேரம் இதுவாகும். அணைக்கட்டு உங்களது சமூகத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் என நினைத்தால், அணைக்கட்டை நிறுத்துவதற்கு முயற்சியுங்கள். உங்கள் நாட்டு சட்டத்தில் உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது என அறிந்து கொள்ளுங்கள். அரசாங்கத்தை மக்கள் கருத்துக்கோரல் அமர்வொன்றை ஏற்படுத்துமாறு வேண்டுகோள் விடுங்கள் அதன் மூலமாக அணைக்கட்டினால் யார் பயன்பெறுகின்றனர் மற்றும் யார் இழக்கின்றனர் என வாதிடுங்கள். நிபுணர்களுடன் செயற்பட்டு சிறந்த மாற்றீடுகளை அல்ரது நட்டயீட்டு திட்டத்தை தயாரித்து அவற்றை பிரச்சாரப்படுத்துங்கள். இருந்தாலும் அணைக்கட்டை நிறுத்துவதற்கான ஆர்ப்பாட்டம் வெற்றிகரமானதாக இருக்கும், ஆனால் அரசாங்கம் சிறிது காலம் சென்ற பிறகு மீண்டும் ஆரம்பிக்க முயற்சிக்கும். நீண்டகால போராட்டத்திற்காக பலமான கூட்டமைப்பை கட்டியெழுப்பது முக்கியமாகும்.

### அணைக்கட்டு கற்கையை புனராலோசணை செய்தல்

பொதுமக்களுக்கு வெளிப்படுத்தப்பட்ட கற்கையை அதிகாரத்துடன் கோரிக்கை விடுங்கள். அந்த கற்கைகளின் பிரதிகளை உங்கால் பெற முடியுமாயின், நிபுணர்களை தேடி அவற்றை புனராலோசனை செய்து அவர்களின் புனராலோசனையை வெளியிடுங்கள். பல நிபுனர்கள் இந்த புனராலோசனையை இலவசமாக மேற்கொள்வர். கற்கைகளை நிபுணர்களால் புனராலோசனை செய்யும் பொழுது பிரச்சினைகளை இனங்காணலாம் மற்ம் அணைக்கட்டை நிர்மானிப்பதால் எது தவறாக இருக்கும் என்பதை முன் கூட்டியே சொல்லலாம்.

### உங்களின் சொந்தமான கற்கைகளில்

பெரும்பாலும் அணைகட்கட்டுகள் எந்தவிதமான கற்கைகளுமே இல்லாமல் மேற்கொள்ளப்படுகிறது அது மக்கள் எவ்வாறு தாங்களின் ஆற்று உரிமைகளை நம்பி இருக்கிறார்கள் என்பதை காட்டுகிறது. அணைக்கட்டு நிர்மாணிக்கப்பட்டால், அவர்கள் எதை இழந்தார்கள் என்பதற்கான ஆவணங்கள் இருக்காதலால் மக்கள் முழுமையான நட்டயீட்டை பெற்றுக் கொள்வதற்கு பதிலாக குறைந்த நட்டயீட்டையே பெறுவர். ஆற்றில் உங்களது சமூகம் எவ்வாறு நம்பியிருக்கின்றது என்பதை ஆவணப்படுத்துவது முக்கியமாகும். அணைக்கட்டு ஏற்படுத்தலாம் என்ற பாதிப்புகளை கள ஆய்வும் வெளிப்படுத்தலாம். “தாய் கிராம ஆய்வு” (பக்கம் 23ல் பெட்டியில் பார்க்கவும்) என்ற ஆய்வு முறையை தாய் கிராம் மக்கள் அபிவிருத்தி செய்துள்ளனர்.

### நிதி வழங்குநர்களை இலக்கு படுத்தல்

யார் அணைக்கட்டுக்கு நிதி வழங்க விருப்பம் தெரிவித்துள்ளனரென்பதை தேடிப்பாருங்கள். நிதி வழங்குநர்கள் இன்னுமொரு நாட்டைச் சேர்ந்தவர்களாயின் அந்த நாட்டின் அரச சார்பற்ற நிஞுறுவனங்களிடம் எங்களின் ஆர்ப்பாட்டத்திற்கு அவர்களிடம் ஆதரவு கோருங்கள். இந்த வழிகாட்டியின் இறுதி பக்கத்தில் தொடர்புகள் தொடர்பான பட்டியலை பார்க்கவும்.

### சட்டரீதியான உடன்படிக்கைகளை கோரல்

நீங்கள் பெயர்வதற்கு தீர்மானித்தால், உங்களுக்கு உறுதியளிக்கப்பட்ட சகலதும் உள்ளடக்கும் விதத்தில் சட்ட பூர்வமான உடன்படிக்கை ஒன்றை கையொப்பமிட்டதாக நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள். உங்களுக்கு அந்த உடன்படிக்கை புரிந்து கொள்ளக் கூடியதாக இருப்பதாக உறுதி செய்து கொள்ளுங்கள். உங்களுக்கு புரியாத எதற்கும் கையொப்பம் இடாதீர்கள். அரசாங்கங்களும் அணைக்கட்டு நிர்மாணிப்பாளர்களம் பெரும்பாலும் புதிய வீடுகள் மற்றும் சிறந்த காணிகளையும் வழங்குவதாக கூறுவர் ஆனால் அரிதாகவே உண்மையாகின்றது.




உங்களுக்கு புரியாத எதிலும் கையொப்பமிடாதீர்கள்!

# கட்டம் 2: நிர்மாணித்தல்

காலவரையரை: 5 முதல் 15 வருடங்கள். பெரும்பாலும் நிர்மாணங்கள் அறிவிக்கப்பட்ட காலத்திற்கும் பார்க்க நீண்டகாலம் எடுக்ககம். இது ஒருசில வேலைகளில் தொழில்நுட்ப கஸ்ட நிலைமை மற்றும் ஒருசில வேலைகளில் ஊழல் காரணமாகவும் இருக்கலாம்.

## இந்த கட்டத்தில் என்ன நடக்கும்?

பொதுவாக அணைக்கட்டின் நிர்மாண நடவடிக்கைகள் இவ்வாறே அமையும்:




இந்த கட்டத்தில் நீங்கள் என்ன செய்யலாம்?
அணைக்கட்டு நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டாலும் உங்களின் ஆர்ப்பாட்டம் இன்னும் வெற்றி அடையலாம். உங்களால் நிர்மாணத்தை நிறுத்த முடியலாம், அல்லது திட்டத்தை சிறந்ததாக அமைக்கலாம். உங்களது போராட்டத்தை தொடர்வது முக்கியமாகும்.

<u>எதிர்ப்பைத் தெரிவிக்கும் ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்தல்</u>
இந்த கட்டத்தில், ஒருசில குழுக்கள் அணைக்கட்டு நிர்மாணிப்பதை நிறுத்துவதற்காக முற்றுகை இடுதல் மற்றும் **கிளர்ச்சிகளற்ற நேரடி நடவடிக்கைகள்** போன்ற ஏனையவைகளை மேற்கொள்ளல். உங்களால் இதை செய்ய முடியாவிடில், நிர்மாணம் மற்றும் மீள் குடியேற்றங்களை கண்காணியுங்கள். அவர்கள் என்ன செய்ய வேண்டு மென்பதை அணைகக்கட்டு நிர்மாணிப்பாளர்கள் அல்லது அரசாங்கம் மேற்கொள்ளாவிட்டால், அவர்கள் அவரகளின் உறுதிகளை நிறைவேற்றுவதற்காக வேண்டுகோள் விடுப்பதற்காக எதிர்ப்பார்ப்பாட்டங்கள் மற்றும் ஏனைய நடவடிக்கைகளை ஏற்பாடு செய்யுங்கள்.

<u>சர்வதேச அரசசார்பற்ற நிறவனங்களுடன் செயற்படல்</u>
பொது மக்கள் அபிவிருத்தி வங்கியின் மூலமாக அணைக்கட்டிற்கு நிதி வழங்கப்பட்டால், அணைக்கட்டினால் ஏற்படுகின்ற பிரச்சினைகள்தொடர்பான தகவல்களை நிதி வழங்குநர்களுக் கிடைக்கின்றதா என்பதை உறுதிசெய்ய சர்வதேச அரசசார்பற்ற நிறவனங்களுடன் செயற்படுங்கள். அவர்கள் நிர்மாணத்தை அல்லது மீள் குடியேற்றத்தை மோசமாக மேற்கொண்டால் ஒருசில நேரங்களில் நிதி வழங்குநர் அணைக்கட்டு நிர்மாணிபாளர்களுக்கு அழுத்தத்தை ஏற்படுத்தலாம். இந்த விடயங்கள் உண்மையாகவே மோசமாக இருந்தால், விடயங்கள் மேம்படுத்தப்படும் வரை பணம் கொடுப்பதை நிதி வழங்குநர்கள் நிறுத்தலாம்.

## கட்டம் 3: நடவடிக்கை

காலவரையறை : 50 வருடங்கள் வரை (ஒருசில வேலைகளில் அதிகமாகலாம், ஒருசில வேலைகளில் குறையலாம்)




இந்த கட்டத்தில் என்ன நடக்கும்?

அணைக்கட்டுகள் கட்டப்பட்ட பின் அவர்கள் வயதை கணிப்பிட தொடங்குவர். ஒரு சில நீர்த்தேக்கங்கள் வண்டலினால் வேகமாக நிறையும். ஒருசில அணைக்கட்டுக் பாதுகாப்பற்ற நிலைக்கு உள்ளாகும் அல்லது உடையலாம்.

அணைக்கட்டொன்று அதன் ஆயுட்காலத்தை அடைந்தால் அதை பொருத்துதல் அல்லது உத்தரவு பத்திரத்தை இரத்துச்செய்வது தேவையாகும். பல அணைக்கட்டுகளினால் மக்கள் மற்றும் ஆறகளுக்கு ஏற்படும் தாக்கங்கள் தொடர்பாக உலகளாவிய ரீதியில் பல குழுக்கள் கோரிக்கை விடுத்தது.

இந்த கட்டத்தில் நீங்கள் என்ன செய்யலாம்?

<u>நட்டயீட்டுக்கு வேண்டுகோள் விடுத்தல்</u>

அணைக்கட்டு கட்டப்பட்டாலும், நட்டயீட்டை வழங்குவதற்காக ஒருசில வியாபார ஸ்தானங்கள் மற்றும் அரசாங்கங்கள் சட்டரீதியான கடப்பாடு இன்னும் உள்ளது. இது உங்களுக்கு உபயோகிக்கப்படுகிறதா என்பதை ப்பற்றி ஆய்வை நீங்கள் மேற்கொள்ள வேண்டும்.

உலகளாவிய ரீதியில் அணைக்கட்டுகளால் பாதிக்கப்பட்ட மக்கள் **நட்டயீட்டுக்காக** கோரிக்கை விடுத்தனர். பல மக்கள் அவர்கள் அந்த அணைக்கட்டை நிர்மாணித்த முகவர்கள்(அரசாங்கங்கள், வங்கிகள் மற்றும் வியாபார ஸ்தாபனங்கள்) அணைக்கட்டுகளால் ஏற்பட்ட தாக்கங்கள் மற்றும் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கான நட்டயீட்டை செலுத்துதல் போன்ற வேண்டுகோள்களை விடுத்தல். ஒரு சில வெற்றியளித்தது. (அடுத்த பக்கத்திலுள்ள பெட்டியை பார்க்கவும்)

அணைக்கட்டு நடவடிக்கைகளை கோரிக்கைகள் மாற்றி அமைக்கும்

ஆற்றின் ஓட்டம் மீண்டும் இயற்கையாக அமைவதற்கு அணைக்கட்டு நடவடிக்கைக்கு மாற்றங்களை ஏற்படுத்த வேண்டுகோள் விடுக்கலாம். இது **மீள் நடவடிக்கை** என்று அழைக்கப்படும். இது ஒருநாளில் வெவ்வேறு நேரங்களில் மின்சாரம் தயாரிப்பதையும் மற்றும் தயாரிக்கும் மின்சார அளவை அல்லது கீழ் நீரோட்டத்திற்கு விடப்படும் அதிகமான நீரை மாற்றி அமைப்பதற்கு இதன் மூலமாக ஈடுபடலாம்.அணைக்கட்டுகளின் மீள் நடவடிக்கைக்காக உலகளாவிய ரீதியில் பல குழுக்கள் போராடுகின்றன.

## கௌதமாலாவில் நட்டயீட்டுக்காக கோரிக்கை

கௌதமாலா சிவில் யுத்தத்தின் மத்திய கட்டத்தில் இருக்கையில், மயா அச்சி பகுதியில் அரசாங்கம் சிக்ஸோய் அணைக்கட்டு நிர்மாணிக்கப்பட்டது. மயா அச்சியில் பலங்குடி மக்கள் வசிக்கின்றனர். அணைக்கட்டுக்காக ஒருசில மக்கள் விட்டுச்செல்ல மறுத்தனர், 1982ல் துணைப்படையினர் 400 பேரை கொன்றனர். 3500க்கும் மேற்பட்ட மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். மேலும் ஆயிரம் பேர் தமது காணிகளையும் தமது வாழ்வாரத்தையும் இழந்தனர்.

ஒருவருட காலமாக, உயிர் பிழைத்தவர்கள் மிகவும் கடுமையான வறுமையில் இருந்தனர். ஆனால் நீதிக்கான அவர்களின் வேண்டுகோளை அவர்கள் கைவிடவில்லை. பாதிக்கப்பட்ட மக்கள் தற்பொழுது அவர்களின் சமூக, பௌதீக மற்றும் பொருளாதார இழப்புகளுக்காக நட்டயீடு கோருகின்றனர்.




பாதிக்கப்பட்ட சமூகங்கள், ஒருசில அரச சார்பற்ற நிறுவனங்களுடன் மற்றும் ஒரு ஆய்வாளரால், அணைக்கட்டின் தாக்கங்கள், இயற்கை வளங்கள், வறுமை மற்றும் உணவு விநியோகம் தொடர்பாக கற்கை ஆவணத்தை சமர்பித்தார். இந்த ஆவணம் மயா அச்சி எதை இழந்தது மற்றும் ஏன் அவர்கள் நட்டயீட்டுக்காக தகுதி பெற்றுள்ளனர் என்ற விடயங்களை கற்கை காட்டுகிறது.

2004 நவம்பரில், அணைக்கட்டு பிரதேசத்தில் சமூகங்கள் பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை ஏற்பாடு செய்தது. இரண்டு நாட்கள் அணைக்ட்டை கைப்பற்றி இருந்த பிறகு, நட்டயீடு சம்பந்தமாக பேச்சு வார்த்தை நடத்துவதற்காக ஆணைக்குழு ஒன்றை அரசாங்கத்தால் நியமிப்பதற்கு ஒப்புதல் அளித்தது. அந்த ஆணைக்குழு அதன் முதலாவது கூட்டத்தை 2005 டிசம்பர் மாதத்தில் நடாத்தியது.

கிறிஸடோபல் ஒசாரியோ சன்செய்ஸ் கூறுகிறார், உயிர் பிழைத்தவர்களை படுகொலை செய்த ஒரு சம்பவம் " எமது உரிமைகள், எமது கலாச்சாரத்திற்கான மரியாதை மற்றும் எமது கௌரவத்தை மீளப்பெறுவதற்காக நட்டயீடு வழியமைத்தது. நட்டயீடு என்பது எமது குடும்பத்திற்கும் மீண்டும் சிறப்பாக வாழ்வதற்குமாக வழங்குவதற்காக, மக்களின் கொள்ளளவை அதிகரிப்பதற்காக மற்ம் சமூகம் நன்மையடைவதற்காகவும் திட்டமொன்றை விருத்தி செய்யப்பட்டது. மக்களை எதிர்காலம் ஒன்று உள்ளது என்பதை சிந்திக்க வைப்பதற்கு நட்டயீடு உதவும். வாழ்க்கையைப்பற்றி சிறப்பாக உணறுங்கள்."

கலந்துரையாடுவதற்கான வினாக்கள்:



# பெரிய அணைக்கட்டிற்கான மாற்றீடு

மக்களுக்கு வெள்ள பாதுகாப்பு, மின்சாரம் மற்றும் நீரை வழங்குவதற்காக சிறந்த வாய்ப்புகள். பெரிய அணைக்கட்டை விட பெரும்பாலும் இந்த வாய்ப்புகள் இலாபமானதாகவும், துரிதமாக நிர்மாணிக்கக் கூடியாதகவும் மற்றும் சுற்றாடல் ரீதியாக மக்களுக்கு குறைந்த பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் இருக்கும்.

உலகளாவிய ரீதியில, அணைக்கட்டால் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களும் பெரிய அணைக்கட்டுகளுக்கு மாற்றீடான தகவல்களை சேகரிக்கின்றனர். அவர்கள் இந்த தகவல்களை சிறந்த மாற்றீடுகளுக்கான உதவியை பெறுவதற்காக அரசாங்கங்களுக்கு அழுத்தத்தை ஏற்படுத்துவதற்காக பாவிக்கப்படுகின்றது. இந்த மயற்சிகள் பாதிப்பை ஏற்படுத்தும் மற்றும் தேவையற்ற அணைக்கட்டுகளை நிர்மாணிப்பதை நிறுத்துவதற்கு உதவியாக இருக்கும்.

இந்த அத்தியாயம், சிறந்த மாற்றீடுகளுக்காக சமூகங்கங்களும் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களும் வெற்றிகரமான நடவடிக்கைகளை வெளிப்படுத்தவும் மற்றும் அணைக்கட்டுகளுக்கான சில மாற்றீடுகளுக்காக நாங்கள் கலந்துரையாடுகின்றோம். உங்களின் ஆர்ப்பாட்டங்களில் வெளிப்படுத்துவதற்காக மாற்றீடுகளை இந்த அத்தியாயம் அள்க்கும் என நாங்கள் நம்புகிறோம். ஏனெனில், ஒவ்வொரு பிராந்நியமும் மாறுபட்ட தேவைகளை கொண்டுள்ளது, உங்களின் பிராந்தியத்திற்கான சிறந்த வாய்ப்புகளுக்காக நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

## ❖ வலுச்சக்திக்கான மாற்றீடுகள்

அரசாங்கங்கள் அவர்களின் பிரஜைகளுக்கு மின்சாரத்தை வழங்குவதற்கு பல வழிகள் உள்ளன. இது வலுச்சக்தி கிராக்கியை குறைத்தல், இருக்கின்ற வலுச்சக்தி நிலையங்கள் மற்றும் மின் கடத்திவரிசை மற்றும் புதிய வலுச்சக்தி மூலங்களை மேம்படுத்தல்.



சுருக்கமான புளோரசன்ட் மின் குமிழ்கள் வலுச்சக்தி பாவனையை குறைக்கும்.

### கிராக்கியை குறைத்தல்

அரசாங்கம் தொழிற்சாலைகள், வியாபார ஸ்தாபனங்கள் மற்றும் நகரத்தில் வாழும் மக்களை மின்சாரத்தை மிகவும் சாமர்த்தியமாக பாவிக்க ஊக்குவிப்பதன் மூலமாக வலுச்சக்தி கிராக்கியை குறைக்கலாம். இது குறைந்த கொள்விளையாகவும் மற்றும் புதிய அணைக்கட்டுகள் மற்றும் புதிய மின்சக்தி ஆலைகளை நிறுவுவதால் ஏற்படும் சுற்றாடல் பாதிப்பகளை குறைத்து கொள்ளலாம்.

குறைந்த மின்சாரத்தை பாவிப்பதற்காக மக்ளுக்கு உதவுவதற்காக இயந்திரங்கள் மற்றும் குறைந்த மின்சாரத்தில் இயக்கும் பல்புகள் போன்றவற்றை வழங்குதல் வலுசச்சக்தியை குறைந்த அளவில் பாவிப்பதற்கான உத்திகளாகும். மின்சார பிணி இயந்திரங்களை பாவிக்கும் மக்கள் மற்றும் வியாபார ஸ்தாபனங்களுக்கு கூடிய வரிகளை அரவிட அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

நாளில் வெவ்வேறு நேரங்களில் மின்சாரத்தை பாவிப்பதற்கு தொழிற் சாலைகளையும் மக்களையும் அரசாங்கங்கள் ஊக்குவிக்க வேண்டும். அப்படியாயின் சிறிதளவு அணைக்கட்டுகள் மற்றும் வலுச்சக்தி நிலையங்களை நிர்மாணிக்க வேண்டிவரும்.

தற்போதுள்ள அணைக்கட்டுகளையும் மின்கடத்திகளையும் மேம்படுத்தல்



வலுச்சக்தியில் இருந்து மின்சாரத்தை மின்கடத்தி மக்களுக்கு, நகரங்களுக்கு மற்றும் தொழிற்சாலைகளுக்கு எடுத்துச் செல்கிறது. பல நாடுகளில், குறைந்த தரத்திலான மின் கடத்திகள் அதிக அளவு மின்சாரத்தை விரயமாக்குகிறது. மின் கடத்திகளை தொடர்ச்சியாக பழுது பார்ப்பதன் மூலமாக மின்சாரத்தை சேமிக்கலாம்.

தற்போதுள்ள மின்சார நிலையங்கள் மற்றும் அணைக்கட்டுகளை மேம்படுத்தலாம். மின்சார நிலையத்தை சுத்தம் செய்து மற்றும் அணைக்கட்டுகளில் நிறையும் வண்டல்களை அகற்றுவதன் மூலமாக மற்றும் ஏனைய தொழில்நுட்ப மேம்பாடுகளை ஏற்படுத்தியும், மின்உற்பத்தி நிலையங்களில் அதிக மின்சாரத்தை உற்பத்தி செய்து கொள்ளலாம். இந்த மேம்படுத்தல்கள் புதிய மின் உற்பத்தி நிலையங்களை நிர்மாணிப்பதற்கும் பார்க்க குறைந்த செலவையும் குறைந்து நேரத்தையும் கொண்டிருக்கிறது.

சிறந்த வலுச்சக்தி மூலங்களை நிர்மாணித்தல்

பெரியஅணைக்கட்டுகளை விட சுற்றாடலுக்கும் சமூகத்திற்கும் குறைந்த பாதிப்பை ஏற்படுத்தும் வலுச்சக்தியை தயாரிக்கும் ஒருசில வழிகள். இதன் பெரும்பாலான வாய்ப்புகள் பெரிய நகரங்கள், தொழிற்சாலைகள் அல்லது கிராமங்களுக்கு மின்சாரத்தை வழங்குவதற்காக பாவிக்கலாம்.



சிறிய நீர் மின்சார நிலையங்கள்

சிறிய நீர் மின்சார அணைக்கட்டுகள் பொதுவாக ஒருசில மீட்டர் அளவு உயரமுடையதாகும். அவைகள் மண்ணால், கல்லால் அல்லது பலகைகளால் நிர்மாணிக்கலாம் பெரும்பாலும் சிறிய அணைக்கட்டுகள் நீர்த்தேக்கங்களை கொண்டிருக்காது, ஆகவே பொதுவாக மக்கள் புலம் பெயர மாட்டார்கள். ஆற்றறின் நீரோட்டம் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தாது. மிகவும் சிறிய சிறு நீர் மின்சார திட்டங்கள் பெரும்பாலும் அணைக்கட்டுவதில் ஈடுபடாது. அவை ஆறற்றிலிருந்து ஒருசில அளவு நீரை திருப்பி மின்சாரத்தை உற்பத்தி செய்யும்.

சிறிய நீர் மின்சார உற்பத்தி திட்டங்கள் உள்ளூர் கிராமவாசிகளாலேயே நிர்வகிக்க ஏற்பாடு செய்யலாம். சீனா, இந்தியா, நேபாளம் போன்ற நாடுகளில் ஆயிரக்கணக்கான சிறிய நீர் மின்சார திட்டங்கள் கிராமங்கள் மற்றும் நகரங்களுக்கு மின்சாரத்தை விநியோகிக்கின்றது.



உயிரிய திண்ம வலுச்சக்தி

பல நர்டுகளில் உயிரிய திண்மம் மிகவும் பிரசித்தமான ஒரு பொது வலுச்சக்தி மூலமாகும். உயிரிய திண்மம் சகல தாவரங்கள் மற்றும் விலங்கினங்களில் இருந்து வரும் சகல கழிவுகளும் உள்ளடக்கப்படுகின்றது. விலங்குகள் மற்றும் விவசாய கழிவுகளை பாவிது அடுப்புகளை எரிப்பதற்காக எரிவாயு மற்றும் கட்டிடங்களை சூடாக்குவதற்கும் பாவிக்கப்படுகின்றது.

உயிரிய திண்மத்தை பாரிய அளவில் பாவிக்கலாம். கரும்பு தயாரிக்கும் நாடுகளில், கரும்பின் தண்டுகளை எரித்து மின்சாரம் தயாரிக்கப்படுகின்றது. அரிசி உமி மற்றும் மரத்தூள்களையும் பாவிக்கலாம்.



### சூரிய மின்சக்தி

சூரிள பலகையை கூரைக்கு மேல் போடுவதால் வலுச்க்தியை சூரியனிலிருந்து சேகரித்துக் கொள்ளலாம் அது நீரை சூடாக்குவதற்கும் மின்சாரத்தை உற்பத்தி செய்யவும் பயன்படுத்தலாம். பெரிய பலகைகள் கூடுதலான சூட்டையும் அதிகமான வலுச்சக்தியையும் சேகரிக்கிறது.



### காற்று மின்சக்தி

பெரிய அணைக்கட்டுகளுக்கும் பார்க்க காற்று மின்சக்தி சுற்றாடலுக்கு குறைந்த அளவு பாதிப்பையே ஏற்படுத்துகிறது. பல ஐரோப்பிய நாடுகளில், ஜேர்மனி மற்றும் ஸ்பெயின் போன்ற நாடுகளில்,கூடுதலான வலுச்சக்தி காற்றில் இயங்கும் சக்கரத்தின் மூலமாகவே தயாரிக்கப்படுகின்றது. இந்தியா, சீனா, தென் ஆபிரிக்கா மற்றும் பிரேஸில் போன்ற நாடுகள் தற்பொழுது சுத்தமான வலுச்சக்தியை உற்பத்தி செய்வதற்காக காற்றில் இயங்கும் சக்கரங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

### புவி உஷ்ண மின்சக்தி

புவிக்குள் வெப்ப மூட்டப்பட்டு வலுச்சக்தியை உருவாகியே புவி உஷ்ண மின்சக்தி பாவிக்கப்படுகிறது. இந்த சூடு நிலத்திற்கடியிலுள்ள நீர்த்தேக்கத்தின் நீர் மற்றும் ஆவியை சூடாக்குகிறது. கிணறுகள் துளைத்து சூடான புவி உஷ்ண நீரை புவி மேற்பரப்பிற்கு கொண்டு வரலாம். இந்த திரவம் பிறகு மின் உற்பத்தி நிலையத்தின் மூலமாக மின்சாரத்தை உருவாக்கலாம். பிலிப்பைன் மற்றும் எல்சல்வடோர் போன்ற நாடுகள் தாங்களின் மின்சாரவையில் 25 சத வீதத்தை புவி உஷ்ண மூலங்கள் மூலமாகவே உற்பத்தி செய்யப்படுகின்றது.

**உகண்டாவில் சிறந்த மாற்றீட்டிற்காக அரச சார்பற்ற நிறுவனத்தின் ஒப்புதல்**




உகண்டாவின் வலுச்சக்தி தேவைகளை சமாளிக்க புஜாகை அணைக்கட்டு தேவையென உகண்டா அரசாங்கமும் மற்றும் உலக வங்கியும் நீண்டகாலமாக கூறுகிறது. ஆனால் உகண்டாவின் அரச சாரபற்ற நிறுவனங்கள மக்களுக்கு நல்ல சுற்றாடல் ரீதியாக குறைந்த பாதிப்பை ஏற்படுத்தும் மாற்றீடை பார்க்குமாறு கோருகிறது. அவர்கள் பாரிய அளவிலான மாற்றீட்டு வலுச்சகதியை தேடத் தொடங்கினர்.

2003 ஏப்பரலில், சுற்றாடல் நிபுணர்களின் தேசிய கூட்டமைப்பு (NAPE), உகண்டாவின் ஒரு அரச சார்பற்ற நிறுவனமும் இணைந்து, புவி உஷ்ண மின்சக்தி தொடர்பான பாரிய மகாநாடொன்றை ஏற்பாடு செய்தது, அந்த மாற்றீடுகள் பற்றி சிந்திப்பதற்கு உகண்டாவிற்கு சிறந்த வாக்குருதியை வழங்கியது. உலகளாவிய ரீதியிலான புவி உஷ்ண நிபுணர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், சுற்றாடல் குழுக்கள் மற்றும் பொதுமக்கள் மகாநாட்டில் கலந்து கொண்டனர்.
மகாநாட்டிற்கு பிறகு, நாடடிற்கான மாற்றீட்டு வலுச்சக்திக்காக கற்கையை மேற்கொள்வதற்காக உகண்டா வலுச்சக்தி அமைச்சரால் குழு ஒன்றை நியமித்தது. இந்த முயற்சிக்காக சுற்றாடல் நிபுணர்களின் தேசிய கூட்டமைப்பிற்கு நன்றி, உகண்டாவில் நீர் மின்சாரம் மட்டுமே வலுச்சக்தி வாய்ப்பாக இருந்தது. சிறந்த, மலிவான மற்றும் தூய வாய்ப்புகளான, புவி உஷ்ண மின்சக்தி, தற்பொழுது கவனத்தில் கொள்ளப்படுகின்றது.

## ❖ நீருக்கான மாற்றீடு

உலகளாவிய ரீதியில் ஆறுகளும் ஈரலிப்பு நிலங்களும் நீர் விநியோகத்திற்காக அணைக்கட்டுகளையும் வாய்க்காள்களையும் அமைத்துள்ளது. ஆனால் பெரும்பாலான நீர் இந்த திறமையற்ற நீர்ப்பாசண மற்றும் நீர் விநியோக முறைகள் ஒழுக்குகளினால் விரயமாக்கப்படுகின்றது. நகரங்களில் வாழும் மக்கள் பெரும்பாலும் நீரை விரயமாக்கின்றனர். நீரை சிறப்பாக முகாமைத்துவம் செய்தால், சகலரினதும் தேவைகளை பெறுவதற்கு தேவையான நீர் இருக்கும். கழே அதற்கு உதவுவதற்காக சில ஆலோசனைகள் கொடுக்கப்பட்டுள்ளது.

### கிராக்கியை குறைத்தல்

பெரிய அளவிலான விவசாய பாவனையாளர்கள் நிறைய நன்னீரை விரயமாக்கின்றனர். பெரிய பண்ணைகளின் நீர்ப்பாசண திட்டங்கள் பெரும்பாலும் நிறைய நீரை நிலத்தில் விட்ட பின்பே கன்றுகளை நடுகின்றனர். மேலதிக நீர் மண்ணை சீரழிக்கிறது. நீரை சேமிப்பதற்காக வேறு விதமான முறைகளை பாவிக்கலாம். ட்ரிப் நீர்ப்பாசணம் நீரை மிக சாதுரியாக பாவிக்கும் அது நேரடியாக நீரை வேர்களுக்கும் தாவரத்திற்கம் வழங்குகிறது. ட்ரிப் நீர்ப்பாசணம் நீரை சேமிக்கிறது மற்றும் அது தாவரத்திற்கும் மண்ணுக்கும் சிறந்தது.

பெரிய அளவிலான விவசாயிகள் மற்றும் பெரிய விவசாய வியாபார ஸ்தாபனங்கள் ஒரு சில சமயங்களில் உலர்ந்த இடங்களில் நெல் மற்றும் கரும்பு போன்ற பயிர்களை பயிரிடுவர் அதறகு நிறைய நீர் தேவைப்படும். பெரிய அளவிளான விவசாயிகள் மற்றும் வியாபார ஸ்தாபனங்களை நிறைய நீர் தேவைப்படாத பயிர்களை பயிரிட ஊக்குவிப்பதன் மூலமாக நீரை சேமிக்கலாம்.

### மழை நீரை சேகரித்தல்

நீரைப்பெற்றுக்கொள்ள சமூகத்தை மேம்படுத்த சக்திவாய்ந்த அற்றும் செலவு கறைந்த முறை மழைநிர் சேகரிப்பாகும். மக்கள் அவர்களின் வீட்டுக்கு அண்மையில் தாங்கி ஒன்றை அமைத்து அவர்களின் கூரைகளிலிருந்து விழும் மழை நீரை சேகரித்தல். வீட்டுப்பாவணைக்காக பெரிய மண் பாணைகளை பாவித்து மழைநீரை சேகரிக்கலாம்.

விவசாயத்திற்காக மலை அடிவாரங்களுக்கு செல்வதற்காக மக்கள் பெரும்பாலும் மழை நீரை சேகரிப்பதற்காக சிறி அணைக்கட்டுகளையும் மண்மேடுகளையும் அமைக்கின்றனர். நீர் நிலத்தை ஈரமாக்குகிறது. மெலதிக நீர்களுக்காக கிணறுகளை அமைக்கலாம். அற்றைய முறை தான் அற்றில் சிறிய அணைக்கட்டுகளையும் கால்வாய்களையும் அமைத்தல். நீர் சிறிய பலகை, மலை மற்றும் மண் அணைக்கட்டு மற்றும் நேரடியாக நிலத்திற்கு அனுப்புவதன் மூலமாக சேகரிக்கலாம்.



## நீரை சேகரிப்பது, வாழ்க்கையை மாற்றும்



1986இல், இந்தியாவின், ராஜஸதானில், ஆள்வார் மாவட்டம் பாலைவனம் போல் இருந்தது. மக்கள் தாங்களது வீட்டுக்கும் நிலங்களுக்கும் போதிய அளவு நீரை பெற்றுக் கொள்ள முடியாமல் இருந்தது. அந்த தருணத்தில், மக்களுக்கு மற்றும் விவசாயத்திற்கு தேவையான நீரை அதிகரிப்பதற்காக தருண் பாரத் சங்க என்ற குழு அமைக்கப்பட்டது. இந்த மக்கள் மழை நீரை சேகரிக்கிறார்கள் என்று அந்த தருண் பாரத் சங்க ஸ்தாபகருக்கு தெரியும் அந்த தருண் பாரத் சங்க அவர்களின் வேலையை ஆரம்பித்த பொழுது, மழை நீரை சேரிப்பதற்கான கட்டமைப்பை மறந்து விட்டனர் மற்றும் ஒருவரையும் எதையையும் நீண்டகாலம் பாவிக்கவில்லை.

அந்த மறந்த மழைநீர் சேகரிப்பு ஞாபகப்படுத்தி சிறிய மண் அணைக்கட்டொன்றை தமது மூதாதையர்கள் கட்டிய ஆற்றிற்கு குருக்காக மீளக்கட்டி நீரைப்பிடித்து பாதுகாத்தனர் ராஜஸதானில் தற்பொழுது 10,000ற்கும் லோன மழைநீரை சேகரிக்கும் சிறிய அணைகட்டுகளும் மண் மேடுகளும் இருக்கிறது அதில் 1000 கிராமங்களுக்கு மேலாக நீர் சேகரிக்கப்படுகிறது. சிறிய ஆணைகட்டுகளுக்கும் மண மேடுகளுக்கும் நன்றி, இந்த பிரதேசத்தில் தற்பொழுது நிலத்திற்கடி நீர் மட்டம் உயர்ந்திருக்கிறது. பொதுவாக வற்றுகின்ற ஆற்றில் வருடம் முழுவதிலும் நீர இருக்கிறது. இது கிட்டத்தட்ட 700,000 மக்களின் வீட்டுப்பாவனை, கால்நடை மற்றும் பயிர்களுக்காக தேவையான சிறந்த நீரை வழங்குகிறது.

ஒரு பரம்பரைக்கு முன்பதாக இந்த மாதிரியான சிறந்த அதிஷ்டம் எமக்கு இருக்கவில்லை," என ராஜஸ்தானின் மண்டல்வாஸ் கிராமத்தின் வயோதிப பெண்ணான லசம்பாய் கூறினார். "நீரினால் நாங்கள் சந்தோஷப்படுகிறோம், எமது மாடுக் சந்தோஷமாக இருக்கிறது வன சீவிகள் சந்தோஷமாய் இருக்கின்றனர்." எமது பயிர்களின் அறுவடை அதிகரித்துள்ளது, எமது காடுகள் பசுமையாக இருக்கிறது, எங்களுக்கு விறகு இருக்கிறது, மாடுகளுக்கு புல் இருக்கிறது மற்றும் எமது கிணறுகளில் நீர் இருக்கிறது

### கலந்துரையாடுவதற்கான வினாக்கள்



- உங்களது சமூகத்திற்கு இந்த கதை எவ்வாறு பொருந்துகிறது?
- உங்களது பிரதேசத்தில் மழை நீரை சேரிப்பதற்காகபாரம்பரிய முறை ஏதாவது இருக்கின்றதா?
- நீரின் மேலதிக தேவைகளுக்காக அந்த முறைகள் மறுமலர்ச்சியை ஏற்படுத்துமா?
- உங்களுக்க பாரிய அளவிளான மக்களை எடுத்து அவர்களுக்கு அவர்களின் சொந்த நீரை விநியோகித்தால் அணைக்கட்டு திட்டத்தை நிறுத்த இது உதவுமா?

## ❖ வெள்ள முகாமைத்துவத்திற்கான மாற்றீடு

ஒரு சில வேலைகளில் வெள்ளத்தை கட்டுப்படுத்துவதற்காக பெரிய அணைக்கட்டுகள் கட்டப்படுகின்றது. எவ்வாறாயினும், பெரிய அளவிலான வெள்ளம் ஏற்படும் சமயங்களில் பெரிய அணைக்கட்டுகள் வெள்ள பாதிப்பை அதிகமாக்கும். வெள்ளத்தை தடுப்பதற்கு பல வழிகள் உள்ளது மற்றும் அவை குறைந்த அழிவையே ஏற்படுத்தும். இது **நீரேந்து நிலைகளை** பாதுகாத்தல் மற்றும் வெள்ள முன் அறிவித்தல மறைகள் ஆகியவையும் உள்ளடக்கும்.

**நீரேந்து நிலைகளை பாதுகாத்தல் மற்றும் வழமைக்கு கொண்டு வருதல்**

நீரேந்து நிலைகளை பாதுகாத்தல் மற்றும் வழமைக்கு கொண்டு வருதல் வெள்ள பாதிப்புக்களை குறைப்பதற்கான சிறந்த ஒரு வழியாகும். சாரமான ஈரலிப்பு நிலம், வெள்ள திட்டமிடல் மற்றும் வனங்களுக்கு செல்லம் நீரை தடுத்து வெள்ளத்தை தடுக்கிறது. அவை கடற்பஞ்சு போன்றவை. மரங்கள் வெள்ள நீரின் வேகத்தை குறைக்கிறது மற்றும் நீரை மிகவும் குறைந்த வேகத்தில் வெள்ள சமவெளிக்கு மேலாக செல்கிறது. பயல்காற்று அடிக்கும் நேரத்தில் எப்பொழுத நீர்மட்டம் உயரமாக இருக்கையில் ஈரலிப்பு நிலங்கள் முழுவதையும் நனைக்கிறது. நீர் மட்டம் குறைவடையும்பொழுது ஈரலிப்பு நிலங்கள் மெதுவாக நீரை விடுவிக்கும்.




ஒழுங்கற்ற நீர்நிலை முகாமைத்துவம்

இன்று, பெரும்பாலான ஈரலிப்பு நிலங்கள், வெள்ள திட்டமிடல்கள் மற்றும் வனங்கள் வீடுகள், வீதிகள் மற்றும் தொழிற்சாலைகள் கடடப்படுவதால் அழிக்கப்படுகிறத. இது வெள்ள பாதிப்புகளை அதிகரித்துள்ளது. சிறந்த வெள் கட்டுப்பாட்டிற்காக இந்த இயற்கை வளங்களை பாதுகாக்க வேண்டும். அவை அழிக்கப்பட்டால், அவை மீள அமைக்க வேண்டும்.

**வெள்ள அபாய அறிவிப்பு முறையை உருவாக்குதல்**

அரசாங்கங்கள் வெள்ள அபாய முன்னறிவிப்பு மறைக்கு முதலீடு செய்யலாமஅதன் மூலம் வெள்ளம் வருவதற்கு முன்பே மக்கள் அறிந்து கொள்ளலாம். அதன் மூலமாக உயிர்களை பாதுகாத்து கொள்ளவும் வெள்ள இழப்புகளை குறைத்துக்கொள்ளவும் முடியும். முன்னறிவித்தல் முறைகள் ஆற்று க்கு அருகாமையில் வசிக்கும் மக்களுக்கு வெள்ளம் வரும்பொழுது அது இடம்பெறும் என கூறுகிறது. இது நகரங்களில் ஒலிபெருக்கிகள் மற்றம் வெள்ளம் இடம்பெற்றால் என்ன செய்வது என்ற அவசர திட்டமிடலலை வைத்திருத்தல். ஏனைய முறைகள் மக்கள் ஆற்றில் எவ்வளவு நீர் இருக்கிறது என்பதை அறிந்து வைத்திருத்தல். எந்த அளவிற்கு நீர் மட்டம் உயரும், என மக்கள் வெள்ளம் இவ்வாறானது அறிதல்.



# முடிவுரை

அழிவை ஏற்படுத்தும் அணைக்கட்டுகளுக்கு எதிரான உங்களின் போராட்டங்களுக்கு உதவுவதற்காக தகவல்கள் மற்றும் கருவிகளை இந்த நடவடிக்கைகளுக்கான வழிகாட்டி வழங்கும் என நம்புகிறோம். நீங்கள் உங்களின் வாழ்வாதாரத்தையும் உரிமைகளையும் பாதுகாத்துக் கொண்டதைப்போல ஏனைய சமூகங்களின் வெற்றியும் உங்களுக்கு ஊக்கமளித்திருக்கம் என நாங்கள் நம்புகிறோம். நீங்கள் உங்களது போராட்டத்தில் தனிமைப்படுத்தப்படவில்லை

1997ல் அரச சார்பற்ற நிறுவனங்களும் அணைக்கட்டால் பாதிக்கப்பட்ட மக்களும் கூறியதாவது:

> "நாங்கள் திடமானவரகள், பலவிதமானவர்கள் மற்றும் ஐக்கியமானவர்கள் மற்றும் எமது காரணங்கள் நேர்மையானவை. நாங்கள் அழிவை ற்படுத்தும் அணைக்கட்டுகளை நிறுத்தி உள்ளோம் மற்றும் அணைக்கட்டு நிர்மாணிப்பாளர்கள் எமது கோரிக்கைகளுக்கு மதிப்பளிப்பதற்காக அழுத்தத்தை ஏற்படுத்தி உள்ளோம். கடந்த காலங்களில் நாங்கள் அணைக்கட்டுகளை நிறுத்தி உள்ளோம், எதிர்காலத்தில் பல அணைக்கட்டுகளை நாங்கள் நிறுத்துவோம்."

*1997 மார்ச் 14 பிரேஸிலன் கேர்டிபாவில் இடம்பெற்ற "அணைக்கட்டுகளால் பாதிக்கப்பட்ட மக்களின் சர்வதேச இயக்கத்தின் முதலாவது கூட்டத்தின்" உறுதிமொழி*

இந்த வசனங்கள் உண்மையென ஒப்புவிக்கப்பட்டுள்ளது. ஒன்றிணைந்து எங்களால் அழிவை ஏற்படுத்தும் அணைக்கட்டுகளை நிறுத்தலாம் மற்றும் மக்களின் உரிமைகளை பாதுகாக்கலாம். ஒன்றிணைந்து, நாங்கள் மக்களின் வலுச்சக்தி மற்றும் நிர் தேவைகளை சுற்றாடலுக்கும் சமூகத்திற்கும் தீங்கு விளைவிக்காமல் வழங்கலாம்.

ஒன்றிணைந்து, நாங்கள் சிறந்த எதிர்காலத்தை கட்டியெழுப்பலாம்.



# பிராந்திய தொடர்புகள்

சர்வதேச ஆறுகள் வலைபின்னல்
1847 பேர்க்கெளி வே
பேர்க்கெளி CA 947703, USA
தெலைபேசி: + 1 510 848 1155
மின் அஞ்சல்: info@internationalrivers.org
வெப்: www.internationalrivers.org
*உள்ளுர் சமூகம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு உதவி வழங்கள்*

**ஆபிரிக்கா**

அபிரிக்க ஆற்று வலைபின்னல்
C/- திரு. பிராங் முராமுசி
நிபுணத்துவ சுற்றாடல் வியலாளர்களின் தேசிய சங்கம் (NAPE), உகண்டா
த.பெட்டி 29909, கம்பாலா, உகண்டா
தொலைபசி: + 25677 492362
மின்அஞ்சல்: nape@nape.or.ug
வெப்: www.nape.or.ug
*அபிரிக்க நீரி வளங்களை நிலையானதாக பாவிக்க அரச சார்பற்ற நிறுவனங்கள் வாதாடுகின்னர் மற்றும் சமூகங்களுக்கான வலைபின்னல்.*

திரு ஹோப் ஒக்பிஹைட்
நீர் மற்றும் பொது சுகாதாரத்தை பாதுகாக்கும் சங்கம் (SWAPHEP), நைஜீரியா
248 யுசேலு –லாகோஸ் ரோட்,
ஹக்போயுடோ, பெனின் சிடி, நைஜீரியா.
தொலைபேசி: + 234 803 742 4999
மின் அஞ்சள்: swaphep@yahoo.com
*நைஜீரியாவின் நன்னீர் வளங்களின் நிலையாண முகாமைத்துவத்தை மேம்படுத்தவும் மற்றும் உள்ளுர் மக்களின் தேவைகளுக்காக சுத்தமான நீரை அதிகரிப்பதற்காக நீர் மற்றும் பொது சுகாதாரத்தை பாதுகாக்கும் சங்கம் செயற்படுகிறது.*

திருமதி. லயான் கிறீப்
சுற்றாடல் கண்காணிப்பு குழு
தென் ஆபிரிக்கா
த.பெ. 13378
7705 மோவ்பிரே, தென் ஆபிரிக்கா
தொலைபேசி: + 27 21 448 2881
மின் அஞ்சல்: rivers@kingsley.co.za
வெப்: www.emg.org.za
*ஆபிரிக்காவில் ஆறுகளை பாதுகாக்கவும் மற்றும் அணைக்கட்டை நிறுத்துவதற்காக செயற்படும் சமூகத்திற்கு மற்றும் நிறுவனங்களுக்கு உதவியை வழங்கள்*

**ஐரோப்பா**

ஐரோப்பா ஆற்று வலைபின்னல்
8 ரூயி குரோசேட்டியர்,
43000 லீ புயி, பிரான்ஸ்
தொலைபேசி: + 33 471 02 08 14
மின் அஞ்சல் : info@rivernet.org
வெப் : www.ern.org
*ஐரோப்பிய ஆறுகளை பாகாப்பதற்கான செற்படும் மக்கள் மற்றும் நிறுவனங்கள், ஐரோப்பிய குழுக்களின் வலை பின்னல்*

**லத்தீன் அமெரிக்கா**

MAB- முவிமெண்டோடொஸ் எடின்கைடோஸ் போர் பராகின்ஸ்
ஹிக்ஸ் கியோட்ரா 705, ஆசா சுல், புளொக் K, காசா 11 பிரசீலியா/DF, பிரேசில் CEP: 70350-711
தொலைபேசி˙ + 55 61 3242 8535
மின் அஞசல் : mab@mabnacional.org.br
வெப் : www.mabnacional.org.br
*அணைக்கட்டில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான பிரேசில் தேசிய இயக்கம்*

திருமதி எல்பா ஸ்டான் கிச்
டேலர் இகோலொஜிஸ்டா
கெசிலா டீ கொரியோ 441
CP 2000 – ரொசாரியோ, ச்டா பீ, ஆர்ஜண்டீனா
தொலைபேசி: + 54 341 426 1475
மின் அஞ்சல்: info@taller.org.ar
REDLAR க்கு *இணைப்பு நடவடிக்கைகளுக்காக உதவுதல்: அணைக்கட்டுகளுக்கு எதிரான, ஆறுகள், அவற்றின் சமூகங்கள் மற்றும் நீருக்கான லத்தீன் அமெரிக்க வலை பின்னல்*

திரு. கஸ்டாவோ சோடோ
ஹிடீயுபாஸ்
பெரிபெரிகோ Pte. 17-8B, Cda.கியுஹாட்ரோ
கமினோஸ்
ஊழட. சன மாடின் ; 29240
சன கிறிஸ்டோபல் டீ லாஸ் காசா
சையாபஸ், மெக்சிகோ
தொலைபேசி: + 52 967 631 5474
மின் அஞ்சல்: guscastro@laneta.apc.org
*அணைக்கட்டுக்கு எதிரான மெசோமெரிக்கன் இயக்கத்திற்கு உதவுதல்.*

தெற்காசியா
திரு. ஹிமான்சு தக்கார்
அணைக்கட்டு, ஆறு மற்ஞறும் மக்களுக்கான தெற்காசிய வலை பின்னல் (SANDRP)
86-D, AD புலொக், சாலிமர் பகா,
டெல்லி 110 088 இந்தியா
தொலைபேசி: + 91 11 2748 4654
மின் அஞ்சல்: ht.sandrp@gmail.com
வெப் : www.sandrp.in
*இந்தியாவின் அணைக்கட்டு நிர்மாணம் தொடர்பான தகவல்களை பகிர்ந்து கொள்ளல் மற்றும் இந்தியாவின் அணைக்கட்டு போராளிகளுக்கு தொடர்புகளை வழங்குதல்*

திரு. கோபால் சிவகோடி ‘சிந்தன்’
நீர் மற்றும் வலுச்சக்தி பாவனையாளர் ஒன்றியம் - நேபாளம்
பொ.த.பெ. 2125
60 நியு பிளாசா மார்க
கத்மண்டு, நேபாளம்
தொலைபேசி: + 977 1 442 9741
மின் அஞ்சள்: gopalchintan@gmail.com
வெப்: www.wafed-nepal.org
நேபாளத்தில் நீர் மற்றும் வலுச்சக்தி திட்டங்களால் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் உள்ளுர் கரிசனை குழுக்களின் தேசிய வலை பின்னல். அணைக்கட்டு மற்றும் ஆற்று விவகாரங்களுக்கான செயற்படும் தெற்காசியா வலை பின்னல் குழுக்களின் இணைப்புகளுக்காகவும் உதவுகிறத.

திரு. ஹம்ஜாட் நசார்
சங்கி அபிவிருத்தி மன்றம்
H.7-A, ஸ்ட்ரீட் 10, F-8/3
இஸ்லாமாபாத், பாகிஸ்தான்
தொலைபேசி: + 92 51 228 2481
மின் அஞ்சல்:amjad.nazeer@sungi.org
வெப் www.sungi.org
*பாகிஸ்தானில் அபிவிருத்தி திட்டங்களால் பயன் மற்றும் உரிமையை பெறுவதற்காக சமூகங்களுக்கு உதவுதல்.*

**கிழக்கு மற்றும் தென் கிழக்கு ஆசியா**
கிழக்கு மற்றும் தென் கிழக்கு ஆசியாவிற்கான ஆறுகளை காத்தல்
C/- திருமதி. ஜொஹான் கார்லிங், RWESA இணைப்பாளர்
கோரிடில்எரா மக்கள் தொடர்பு
த.பெ. 975
2600 பகியோ சிடி, பிலிப்பைன்ஸ்
தொலைபேசி: + 63 74 442 2115
மின் அஞ்சல்: joan@cpaphils.org
வெப்: www.rwesa.org
*கிழக்கு மற்றும் தெற்கிழக்காசிய அணைக்கட்டினால் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான வலை பின்னல் அழிவை ஏற்படுத்துகின்ற ஆறுகள் மற்றும் அபிவிருத்தி திட்டங்களை நிறுத்துவதற்காக செயற்படல்.*

திருமதி. பியான்போர்ன் டீட்டிஸ்
லிவிங் ரிவர்ஸ் சியாம்
78 மூ 10, சுத்தெப் ரோட், தம்போல் சுத்தெப் முவாங் சியாங் மாய் 50200, தாய்லாந்து
தொலைபேசி: + 66 53 278 334
மின்அஞ்சல்: pai@chmai2.loxinfo.co.th
வெப் : www.searin.org
*தென் கிழக்க ஆசியாவில் பிரதான நிலத்தில் ஆறு மற்றும் சூழலியல் நிலைமக்கு அச்சுறுத்தலுக்கு எதிரான மற்றும் அவர்களின் வளங்களுக்கான உரிமைகளுறுக்காக உள்ளுர் சமூகங்களுக்கு உதவுதல்.*

புவியின் நண்பர்கள் ஜப்பான்
3-17-24-2F மஜிரோ தோசிமா-ku
டோக்கியோ 171-0031, ஜப்பான்
தொலைபேசி: + 81 3 3951 1081
மின் அஞ்சல் : finance@foejapan.org
வெப்: www.foejapan.org
*சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கியின் (JBIC) ஜப்பானின் திட்டங்கள் மற்றும் கொள்கைகளுக்கான கண்காணிப்பாளரகள்.*

இலங்கை இயற்கை ஒன்றியம்
இல 546/3 வட்ட மாவத்தை,
கங்கொடவில,
நுகெகொட
தொ.பே 0112803139 தொலைநகல்:0112803139
slnf@sltnet.lk / www.slnf.net

SLNF

இலங்கை இயற்கை ஒன்றியம்
இல 546/3 வட்ட மாவத்தை,
கங்கொடவில,
நுகெகொட
தொ.பே 0112803139 தொலைநகல்:0112803139
slnf@sltnet.lk / www.slnf.net

INTERNATIONAL RIVERS
people • water • life

ISBN-978-955-1944-04-9
9 789551 944049